Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

தபால் பெட்டி எண்: 49

போன் 389

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 19 ஆம் நாள் | ஐ. ஆகிர் 25 | (4-12-61) | திங்கட்கிழமை | இதழ் 250

வாசனை உலகில் ஓர் பரப்புபர!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# வெங்காய உத்தரவாத விலையை அதிகரிக்க கோரிக்கை

## இறக்குமதியைக் குறைக்க முயற்சி

### விளைபொருள் உற்பத்திச் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

வெங்காய உத்தரவாத விலைத் திட்டத்தின் விலையை அதிகரிக்க வேண்டுமென்று வட பகுதி விளைபொருள் விருத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாஜம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. இது சம்பந்தமாக உணவு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. கோ. ஆழ்வாப்பிள்ளையை இச் சமாஜத்தைச் சேர்ந்த தூதுகோஷ்டியொன்று மிக விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறது. இப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இத் தூது கோஷ்டி விரைவில் கொழும்பு செல்லவிருப்பதாகவும் தெரிகிறது.

இப் பொழுதிருக்கும் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கமக்காரர்கள் பயனெதுவும் பெறமுடியவில்லையெனவும் இதனல் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரவாத விலைத்திட்டத்தில் உள்ளூர் உற்பத்திக்கு விலையை அதிகரிப்பதன் மூலம் இங்குள்ள உற்பத்தியைப் பெருக்குவதோடு படிப்படியாக வெளிநாட்டு இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டுமெனவும் பேச்சுவார்த்தையின் போது கோரப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இந்நிலையில் இலங்கை முழுவதுக்கும் போதிய வெங்காயத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யலாமெனவும் உத்தரவாத விலை அதிகரிக்கப்படாத பட்சத்தில் எதிர் காலத்தில் இச் செய்கை பாதிக்கப்படுமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

வெங்காய உத்தரவாத விலைத்திட்டத்தின் விலையைக் கூட்டவேண்டுமென்பது பற்றி குறிப்பிட்ட சமாஜத்துக்கும் அரசாங்கத்துக்கு மிடையில் கடிதத் தொடர்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## கொடித்தினத்துக்குமக்கள் ஆதரவு

### நூல்நிலைய நிதிதிரட்டல் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய நிதிக்காக அண்மையில் நடாத்தப்பட்ட கொடித் தினங்கள் மூலம் அதிக உதவியும் ஆதரவும் பொதுமக்களிடமிருந்து கிடைத்திருப்பதாகத் தெரிகிறது

மேயர், மாநகரசபை அங்கத்தவர்கள் சிலர், மற்றும் நூல் நிலையப் பொறுப்பாளர்கள் அனைவரும் கொடி விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். கொடித்தின அமைப்பாளர்கள் எதிர்பார்த்த ரூபா பத்தாயிரம் நூல்நிலைய நிதியுதவிமூலம் கிடைக்குமென பொறுப்பாளர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

கொடித்தினம் முடிவடைந்த போதிலும் நூல்நிலையத்துக்குப் பணம் சேர்க்கும் வேலை அடுத்தாண்டுஜனவரிவரை விரிவான முறையில் நடைபெறலாமெனவும் தெரிகிறது.

இந்நூல் நிலையத்தின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட கொழும்புவாழ் மக்களிடமிருந்தும் நிதிதிரட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமெனத் தெரிகிறது. இந்நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு மேயர்தலைமையில் ஓர் கோஷ்டி இம்மாத இறுதியில் கொழும்புக்குப் பிரயாணமாகலாம். இதற்கான முன்னேற்பாடுகள் கொழும்பிலுள்ள பல்வேறு சங்கங்களின் மூலமும் கவனிக்கப் பட்டுவருகின்றன.

இங்கு நடைபெற்ற கொடித்தினத்தில் மாணவர்களும், பள்ளிக் கூடங்களும், பொதுமக்களும் அதிக ஆதரவு காட்டியிருக்கின்றனர். பலர் புத்தகங்கள் அன்பளிப்பாகவும் கொடுத்தனர்.

## உணவு அமைச்சரின் திட்டம்

கொழும்பு, திங்கள்

நியாயமான விலைகளில் மரக்கறிகள் கிடைக்கவும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் விற்பனவிலாகா மரக்கறிவிற்பனவுவசதித் திட்டத்தை விஸ்தரிக்க உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. லங்கரத்தின திட்டமிட்டுள்ளார்.

—

## பரீட்சையை தொடர்ந்துநடத்தும்

ஓமாகா, நெப்ராஸ்கா, டிச. 2

சோவியத் யூனியன் ஆட்சேபித்தாலுங்கூடபிரான்ஸ் தமது அணுஆயுத பரிசோதனைகளைத் தொடர்ந்து, நடத்திவருமென்று பிரஞ்சு ராணுவ மந்திரி பியாரி மெஸ்மர் இங்கு தெவித்தார்.

## இந்தியாவிலுள்ள பிரஞ்சு பகுதிகள்

### சட்டசபை அங்கத்தவர் கருத்து

சென்னை, டிச. 3

இப்பொழுது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் பிரஞ்சு சட்டசபை அங்கத்தவர் தூது கோஷ்டியைச் சேர்ந்த திரு. பாஸ்சார்என்பவர்நேற்று சென்னையில் அளித்த பேட்டியொன்றில் இந்தியாவிலுள்ள பிரஞ்சு உடமைப் பகுதிகளை முறைப்படி இந்திய யூனியனுக்கு அளிப்பதற்கு பிரஞ்சுசட்டசபை அங்கீகாரமளிப்பதில் எவ்வித சிரமமுமிருக்காதென நம்பிக்கை தெரிவித்தார்.

பாரத நாட்டில் தங்கள் சுற்றுப்பிரயாணம் பயனுள்ளதாக இருந்ததென்றும் அவர் சொன்னர்.

பாரதத்தில் பிரான்ஸ்பற்றி நல்ல அபிப்பிராயம் நிலவுவதாக அவர் கூறினர். —

## டாக்டர் ஒபிரியன் பதவியிலிருந்து ராஜினமா

நியூயோர்க், டிச. 3

கடாங்காவில் ஐ. நா. வின் தலைமைப் பிரதிநிதியாகவிருந்த டாக்டர் ஓப்ரியன் தமது பதவியிலிருந்துவிலகிய 24மணிநேரத்துக்குள் ஐரிஷ் ராஜதந்திர சேவையிலிருந்தும் ராஜினமாச் செய்துகொண்டார்.

பிரிட்டனும்பிரான்சும்தமக்கு எதிராகக் கொண்டுவந்த பழுகான் தமது ராஜினமாவுக்குக் காரணம் என்று டாக்டர் ஒப்ரியன் தெரிவித்துள்ளார்.

பேச்சு, செயல், சுதந்திரத்தைத்தாம் மீண்டும் பெற்றுக் கொள்ளவே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடாங்காவிலுள்ள அந்நியரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை பிரிட்டனும் பிரான்சும் எதிர்க்கவில்லையாயினும் அத் தீர்மானத்தைஅமுல் நடத்துவதை அவைகள் எதிர்த்தனவென்று டாக்டர் ஒப்ரியன் தெரிவித்துள்ளார். —

மாவிட்டபுரம், ஞாயிறு

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எம். கணேசன் என்பவர் தென் இந்தியாவில் இருந்து வந்த 12 சட்ட விரோதக் குடியேற்றக்காரருக்குப் புகலிடம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி கோர்ட்டில் ஆஜராகாமையால் நீதிபதி அவரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

## "மக்கள் தியாகங்கள் செய்யவேண்டும்"

### இரத்தினபுரி மகாநாட்டில் பிரதமர் வேண்டுகோள்

இரத்தினபுரி, சனி

நாட்டின் முன்னேற்றத்திற்காக மக்கள் சிலதியாகங்களைச் செய்யவேண்டுமென்றும், கஷ்டங்களை அனுபவிக்கவேண்டுமென்றும் இங்கு நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்டார்.

தேசிய அபிவிருத்தி வரியினல் கிடைக்கும் ஒவ்வொரு சதமும் நாட்டின் அபிவிருத்திக்காகவே செலவிடப்படுகிறதென்றும், உபஉணவுப்பொருள் உற்பத்திபோன்ற விஷயங்களுக்கும் இந்த வரி பயன்படுகிறதென்றும் பிரதமர் கூறினர்.

காலஞ்சென்ற தன் கணவரின் கொள்கையை எவ்வித மாற்றமுமின்றி தாம் பின்பற்றப்போவதாய்க் கூறிய அவர் பிரதமர் என்ற ரீதியில் தாம் பல கஷ்டங்களை எதிர்நோக்கியதாயும் ஒரு சிலரிடமிருந்த அதிகாரம் பலருக்கு மாற்றப்படும்வரை நாட்டின் சுதந்திரம் பூரணமாக இருக்காதென்றும் அவர் குறிப்பிட்டார்.

வல்லரசுக் கோஷ்டியில் சேராத கொள்கையினல் இலங்கை சிறிய தேசமாயினும் பாதுகாப்பு சபையிலும் ஐ. நா. விலும் ஓரளவுபணியாற்ற முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அபிவிருத்தி வரி

## 50,000 ஊழியர் கலந்துகொண்ட ஆட்சேபக் கூட்டம்

### "ஜே. ஆரின் பாதையில் நிதிமந்திரி"

—டாக்டர் பெரேரா

கொழும்பு, ஞாயிறு

"அநியாய வரியை எதிர்த்துக் குரல் எழுப்ப தொழிலாளர்கள் ஒன்றுபட்டுள்ளனர் ஒன்று சேர்ந்து எடுக்கும் நடவடிக்கை நல்ல பயன் தரும்" என்று அரசாங்க சேவை லீக் தலைவரும் அரசாங்க சேவை குமாஸ்தாக்கள் சங்கத் தலைவருமான திரு. டி. பி. திஸ்ஸநாயக்கா நேற்று மாலை கால்பேஸ் மைதானத்தில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வரி எதிர்ப்புக் கூட்டத்தில் தமிழில் பேசுகையில் கூறினர்.

சமீபத்தில் வெள்ளைச் சீனி விலையில் ஐந்து சதம் குறைக்கப்பட்டது தொழிலாளருக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்று திரு. திஸ்ஸநாயக்கா கூறினர்.

அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வரியை எதிர்க்கு முகமாக நேற்று கால்பேஸ் மைதானத்தில் அரசாங்க சேவைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஆட்சேபக் கூட்டத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்களும் தனிப்பட்ட ஸ்தாபனங்களின் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

'அநியாய வரி' என விவரிக்கப்பட்ட இந்த வரியை எதிர்ப்பதற்காக கூடிய இந்தக் கூட்டத்தில் இதுவரைகாலமில்லாத கூட்டம் கூடியிருந்ததாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தார்கள்.

ஊழியர்கள், கொழும்பு பிரதான வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்று கால்பேஸ் மைதானத்தை அடைந்தார்கள். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் 'தேசிய அபிவிருத்தி வரி எதற்கு?' தேசிய அபிவிருத்தி வரி ஒரு பெரிய மோசடி போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட சிவத்த அட்டைகளைத் தாங்கி மருதானை வழியாக கால்பேஸ் மைதானத்துக்குச் சென்றார்கள். ஒன்றரை மைல் நீளமான ஊர்வலம் மைதானத்தைச் சென்றடையப் பல மணி நேரங்கள் ஆகின.

(8-ம் பக்கம் பார்க்க)

### தேவை

புதிய சினிமா தியேட்டருக்கு ரிக்கட் விற்க வாங்க ஆட்களும் காஷியரும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 5-ந் திகதி தொடக்கம் 10-ந் திகதி வரை காலை9மணி தொடக்கம் 12மணி வரை நேர்முகமாக விண்ணப்பிக்கலாம். பிணைப்பணமின்றி ஆட்கள் ஏற்கப்படமாட்டார்கள். அதிபர்: தியாகராஜா, 109, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனவு

மூன்று பெரிய மலைவேம்பு மரங்கள் 23-12-61சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அருள் யோவான் கல்லூரியில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். மு. சா. தம்பித்துரை, பொக்கிஷாதிபதி, அருள் யோவான்கல்லூரி, யாழ்ப்பாணம்.

### வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்
### புது மாணவரைச் சேர்த்தல் 1962

கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புக்களில் 6-ம் வகுப்பிலும் யூனியர் ஏச். எஸ். ஸி. (Junior, H.S.C. Science and Arts) வகுப்புகளிலுமே மாணவர் சேர்க்கப்படுவர். இவ்வகுப்புக்களுக்கு மாணவரைச் சேர்ப்பதற்கு 16-12-61-ல் ஒரு பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பங்கள் 10-12-61 வரையும் ஏற்கப்படும் மறு வகுப்புக்களில் இடமில்லை. ச. அம்பிகைபாகன், அதிபர்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## 23 ஆண்டுகளாக கல்வி மந்திரி சொல்லி வந்தாராம்

கம்பஹா, ஞாயிறு

"நான் எந்த நேரமும் இறப்பதற்குத் தயாராயிருக்கிறேன். ஆனால் நான் ஒரு சுண்டெலியைப் போல் இறக்கமாட்டேன்" என்று பண்டாரவத்தை அரசினர் ஆண்கள் பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கல்வி, ஒலி பரப்புமந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசிதாவது:—

"கல்வியின் மூலம் நாட்டுக்கு நன்மைகளைச் செய்ய முயற்சி செய்யும் பொழுது, ஒவ்வொரு மூலை முடுக்குகளிலிருந்தும் நான் தாக்கப்பட்டேன். காலமும் நேரமும் வரும் பொழுது நான் இறக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் நான் மற்றவர்களைப் போல் பயந்து ஓடும் கோழையல்ல. சுண்டெலியைப் போல் இறக்க நான் தயாராக இல்லை. புகழுக்காகவோ அன்றி பெருமைக்காகவோ நான் நாட்டுக்குச் சேவை செய்ய முன்வரவில்லை. இந்த நாட்டின் அரசாங்க பாஷையாக சிங்களம் வரவேண்டுமென்று நான் இப்போது மட்டும் கூறவில்லை. சுமார் 23 வருட காலங்களுக்கு முன்னரே இதை எடுத்துக் கூறியிருக்கின்றேன்."

# கலை அரங்கம்

## சென்னையில் "பத்மினி" ஆஸ்பத்திரி

பத்மினியின் வீட்டில் இப்பொழுது 'பத்மினி கிளினிக்' என்ற பெயரில் ஒரு ஆஸ்பத்திரியை அவரது கணவர் டாக்டர் கே. டி. ராமச்சந்திரன் ஆரம்பித்துள்ளார்.

தமிழ்த் திரையுலகில் பிரபல நட்சத்திரமாக விருந்து சென்ற மேமாதம் 25-ந் திகதி குருவாயூரில் திருமணம் செய்து கொண்ட பத்மினி, திருமணத்துக்குப்பிறகு லண்டன் போகப் போவதாகவும் அதற்குப்பின் கணவனின் சொந்த ஊரான மலையாளத்திலுள்ள தலைச்சேரியில் ஒரு ஆஸ்பத்திரியை நிறுவி அங்கே தங்கப்போவதாகவும் வதந்திகள் பரவின.

ஆனல் இப்பொழுது பத்மினியுடன் அவரது கணவரும் சென்னைக்கே வந்து குடியேறி பத்மினியின் வீட்டிலேயே ஆஸ்பத்திரியை தொடக்கியுள்ளார்.



### தங்கவேலு ரஷ்யா செல்வார்

1962-ம் வருட ஆரம்பத்தில் பிரபல நகைச்சுவை நடிகர் கே. ஏ. தங்கவேலு ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவருவதற்கான ஏற்பாடுகளைச்செய்து வருகிறார்.

### இந்திப் படத்தில் சந்திரபாபு

விரைவில் தயாரிக்கப்படவிருக்கும் இந்திப்படமொன்றில் பிரபல நகைச்சுவை நடிகர் ஜே. பி. சந்திரபாபு நடிப்பார் என்று தெரியவருகிறது.

### சாந்தாராமின் மகளும் நடிக்கிறார்

பிரபல படத் தயாரிப்பாளரும் டைரக்டருமான சாந்தாராம் தாமே பிரதமபாகத்தில் நடித்துத் தயாரித்துவரும் 'ஸ்திரி'யில் தமது மகளான ராஜ்ஸ்ரீயையும் நடனமாட வைத்துள்ளார். சிறுமியாக இருந்தபோது 'பார்ச்சேயின்' என்ற படத்தில் ராஜ்ஸ்ரீ நடித்திருக்கிறார்.

### வீரப்பாவின் புதியபடம்

'வீரக்கனலை'த் தயாரித்து வெளியிட்ட வில்லன் நடிகர் பி. எஸ். வீரப்பாவின் பி. எஸ். வி. பிக்சர்சின் அடுத்த படத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மலை வாழ் மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு ஜாவர் சீதாராமன் திரைக்கதை, வசனம் எழுதும் இந்தப் படத்தில் சிவாஜி கணேசன், சரோஜாதேவி, தங்கவேலு, வீரப்பா ஆகியோர் நடிப்பார்கள். கே. சங்கர் டைரக்ட் செய்யும் இப்படத்துக்கு கே. வி. மகாதேவன் இசையமைப்பார்.

### 'டப்பிங்' படங்களுக்கு எதிர்ப்பு

கன்னட மொழியில் பிற மொழிப் படங்களை 'டப்' செய்வதைக் கண்டித்து பங்களூரில் கூடிய மைசூர் ராஜ்ய கன்னடப் பட ரசிகர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

### நடமாடும் ஆஸ்பத்திரி

சினிமாத்துறையிலுள்ள தொழிலாளர்களுக்காக நடமாடும் ஆஸ்பத்திரியையான்றை ஆரம்பிப்பதற்காக பம்பாய் சினிமாத் தயாரிப்பு ஊழியர்கள் சங்கம் ஏற்பாடுசெய்து வருகிறது. இதுசம்பந்தமாக இச் சங்கம் தயாரிப்பாளர்களிடம் உதவி கோரியுள்ளது.

### 'முத்து மண்டபம்' படமாகிறது

எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பான 'முத்து மண்டபம்' என்ற கதை இப்பொழுது படமாக்கப்பட்டு வருகிறது. எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்துவருகிறார்.

### உடுப்பிட்டியில் 'தளபதி'

உடுப்பிட்டி பாரதி கலா மன்றத்தினரால் இம்மாதம் 18-ந் திகதி 'தளபதி' என்னும் வரலாற்று நாடகம் அரங்கேற்றப்படவிருக்கிறது என மன்றத்தினர் அறிவிக்கின்றனர். கலையரசு சொர்ணலிங்கம் தலைமை தாங்குவார்.

### மனோஜ் திருமணம்

இந்திய நடிகரான மனோஜிக்கு சென்ற வெள்ளிக்கிழமை திருமணம் நடைபெற்றது. தனது பெற்றோர் பார்த்து நிச்சயித்த பெண்ணை மனோஜ் திருமணம் செய்துகொன்டார். இத் திருமணம் டில்லியில் நடைபெற்றது.

### 'சைனு டவுண்'

'சக்தி' பிலிம்சார் தயாரித்து வரும் 'சைனு டவுண்' என்ற இந்திப்படம் வேகமாக வளர்ந்துவருகிறது. ஷம்மிகபூர், மதன்பூரி, கௌதம் முகார்ஜி, கனுராத், ஷகிலா, ஹெலன் ஆகியோர் நடிக்கும் இப் படத்தின் வசனத்தை விராதோர் திராகௌரும் பாடல்களை மஜரு சுல்தான்புரியும் எழுதுகின்றனர். ரவி இசை அமைக்கிறார்.

டைரக்டர் டி. ஜானகிராம் தயாரிப்பதாகவிருந்த 'வேளாங்கன்னி' என்ற கதையை இப்பொழுது குலாலா பிலிம்சார் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். கம்பதாசன் கதையும் பாடல்களும் எழுதியிருக்கும் இப்படத்தில் கதாநாயகியாக நடிக்க கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒரு புது முகம் ஒப்பந்தம் செய்யப்படுவாராம். ஏ. எஸ். ஏ. சாமி இப்படத்தை டைரக்ட் செய்வார்.


வெளிவந்துவிட்டது!

**1962-ம் ஆண்டு மாணவர் தினக்குறிப்பு**

மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக பல விசேஷ அம்சங்களுடன் வெளியிட்டிருக்கிறோம்.

விலை சதம் 75 மாத்திரம்

**ஈழநாடு லிமிட்டெட்**
சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.



எதிர்பாராத நிகழ்ச்சிகளினின்றும் உங்களைப் பாதுகாக்க



கொழும்பு அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்

இலங்கை வங்கிக் கட்டடம் யோர்க் வீதி கொழும்பு 1

மற்றும் எமது அலுவலகங்கள் நாடெங்குமுண்டு

யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனம்:

**கொழும்பு அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்,**

முதலாம் மாடி, 'ராஜா கட்டிடம்'
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஊரெழு கொலைவழக்கு

# நீதிமன்றத்தில் புகைப் படங்கள் சமர்ப்பிக்கப்பட்டன

## எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தொகுப்புரை இம்மாதம் 13-ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊரெழு கொலை வழக்கு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இவ்வழக்கோடு சம்பந்தப்பட்ட பதினொரு புகைப்படங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. எட்டுப் புத்தகங்களாகக் கட்டப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இப்படங்களில் முதலாவது படம் கரந்தன் என்னுமிடத்தில் இறந்தவரின் சடலம் அண்ணாந்தவாறு படுத்திருக்கும்போது எடுக்கப்பட்டிருந்தது.

பயிற்றப்பட்ட தகுதிவாய்ந்த பொலிஸ் புகைப்படப் பிடிப்பாளரான திரு. எல். கே. பியரத்தின இப்படங்களைக் கோர்ட்டில் சமர்ப்பித்து சாட்சியமளித்தார். மூன்ருவது எதிரியின் வளவுக் காட்சிகளையும் மோட்டார் வாகனம், இறந்தவரின் சடலம் ஆகியவற்றையும் படம் பிடித்ததாகவும் அவர் அவ்வமயம் தெரிவித்தார்.

### புகைப்படக்காரருக்கு பாராட்டு

புகைப்படங்களைப் பார்வையிட்ட மாஜிஸ்டிரேட் புகைப்படக் கலை சம்பந்தமான சில கேள்விகளைச் சாட்சியிடம் கேட்டடர். சாட்சி அவற்குப் பதிலளித்தார். மாஜிஸ்டிரேட் அப்படங்கள் நன்ருக அமைந்திருப்பதாகக்கூறி புகைப்படக்காரரான திரு. பியரத்தினவின் திறமையைப் பாராட்டினர்.

### குற்றச்சாட்டுக்கள்

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலை செய்ததாகவும் கொலைக்கான சாட்சியங்களை மறைத்ததாகவும் குற்றஞ் சாட்டி சுப்பையா மாடசாமி, முத்துச்சாமியின் கார் சாரதி, ஓய்வு பெற்ற மராமத்து ஓவர்சியர் கே. இசல்லையாவின் மகள் சரஸ்வதி ஆகியோர்மீது சுன்ளுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலை இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

முடிக்குரிய தரப்பில் காங்கேசன் துறை உதவிப்பொலிஸ் சுப்பிரின்டெண்ட் திரு. ஏ. எல். மரியநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

முதலாம், மூன்ரும் எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்துரை ஆஜரானர். இரண்டாம் எதிரியின் சார்பில் திரு. ஆர். விசுவநாதன் ஆஜரானர்.

### மோட்டார் வாகனம்

இவ்வழக்கில் இறந்தவரின் சடலத்தை எடுத்துச் செல்ல உபயோகிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மோட்டார் வாகனம் பொலிசாரால் படப்பிடிப்பாளரும், பரிசோதனையாளரும் வரும்வரை பாதுகாத்தது சம்பந்தமாக ஏழு பொலிசார் அன்று சாட்சியமளித்தனர். பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஹென்றி இராசபக்ச, ஜாமி, பெரேரா, விஜயதாசா ஏ. எம். பெரேரா, எம். டபிள்யு. பெரேரா, தர்மதாசா ஆகியோரே மேற்கண்ட விஷயமாகச் சாட்சியமளித்தனர்.

இதன்பின்னர் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த புகைப்பிடிப்பாளர் திரு. எல். கே. பியரத்தின புகைப்படங்களைச் சமர்ப்பித்துச் சாட்சியமளித்தார். இதையடுத்து இக்கொலையோடு சம்பந்தப்பட்ட இடங்கள் சம்பந்தமான படத்தை பொலிஸ் கான்ஸ்டபிள் டி. பி. எச். ஆராச்சிக்கே சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

### முடிக்குரிய தரப்பின் இறுதிச் சாட்சியம்

முடிக்குரிய தரப்பில் இறுதியாகச் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலை தமது சாட்சியத்தில் மூன்ருவது எதிரியை அவரது வீட்டில் காலை 10 மணிக்குக்கைது செய்து சுன்ளுகம் பொலிஸ நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் மூன்ருவது எதிரியின் சாட்சியத்தைக் காலை 10-30 மணிக்கு பொலிஸ நிலையத்தில் வைத்துப் பதிவு செய்ததாகவும் கூறினர்.

இத்துடன் முடிக்குரிய சாட்சியங்கள் முடிவுற்றன. இந்நிலையில் வழக்கு இம்மாதம் 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இம்மாதம் 13-ந் திகதி எதிரிகள் தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர்களின் தொகுப்புரை ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## "ஸீட்டோ" மீது கண்டன தீர்மானம்

லண்டன், டிச. 2

தென்கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கண்டனம் செய்தும், இந்த ஒப்பந்தத்திலிருந்து பிரிட்டன் விலக வேண்டுமென்று கோரியும் 20 பிரிட்டிஷ் எம். பி.க்கள் காமன்ஸ் சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளனர்.

---

## ககாரின்

லக்னே, டிச. 2

லக்னே வந்துசேர்ந்த ரஷ்ய வானவெளி வீரர் ககாரினுக்கும், அவர் மனைவிக்கும் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. இன்று அவர்கள் பம்பாய் வந்துசேர்ந்தனர். இரு தினங்கள் அவர்கள் அங்கு தங்குவார்கள்.

---

## தங்கனீகா சுதந்திரதினத்துக்கு சர் ரிச்சார்ட்

கொழும்பு, சனி

தங்கனிகாவின் சுதந்திர தினத்தில் இலங்கையின் பிரதிநிதியாக, புதுடில்லியிலுள்ள இலங்கைத்தூதர் சர் ரிச்சார்ட் அலுவிகார கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டது

---

# 'ஆசைதான் தீமைகளுக்கு காரணம்'

## கண்டியில் சுவாமி சுத்தானந்தர்

கண்டி, சனி

"ஒரு மனிதன், இது வேண்டும், இது வேண்டாம்; இது நல்லது, இது கெட்டது என்று, விருப்பு வெறுப்பு என்ற இருமை நிலைக்குட்பட்டிருப்பானுனல், அவன் இந்திரிய நுகர்ச்சிக்கு அடிமையாகி விடுவான். அவனல் இந்திரியங்களை அடக்கியாள முடியாது. அதை உலக விவகாரங்களில் ஈடுபட விட்டு விடுவான். அதனல் அவன், சதா ஏதோ எண்ணங்கள், வடிவங்கள், தீர்மானங்களைக் கண்டு கொண்டேயிருப்பான். இப்படி இவன் சதா பொருள்களை நினைத்துக்கொண்டேயிருப்பதனுல், திடீரென்று ஒன்று இவனைக் கவரும். அதையே அவன் திரும்பத் திரும்பக் காண அங்கே அவனுக்கு பற்றுதல் தோன்றிவிடும். அந்தப் பற்றுதலே வளர்ந்து ஆழ்ந்து பதிந்து பின் ஆசையாகப் பரிணமிக்கின்றது. ஆசைக்குட்பட்டவன், அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முற்படுகின்ருன். அப்போது அங்கோ ஏதாவது தடை ஏற்படுகின்றது. உடனே, அந்த தடைப்பட்ட ஆசையே கோபமாக வடிவெடுக்கின்றது. கோபம் கொண்டவன் பயித்தியக்காரனைப்போல் நடந்து கொள்கின்ருன். அவன் உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டு விடுகின்றது. குழப்பத்தால் அவன் 'நிதானம்' இழந்துவிடுகின்ருன் நினைவு அறுபட்டு விடுகின்றது. எது செய்யப்படுகின்றது என்பதே தெரிவதில்லை. நினைவிழந்தவனிடம் பழைய நிகழ்ச்சிகள் ஏதும் தோன்ரு. முந்திய நினைவுகளை வைத்தே அறிவானது புதிய செயல்களைத் தோற்றுவிக்கின்றது. ஆகவே கோபம் கொண்டு நினைவிழந்தவனின் அறிவானது, புதியதைத் தோற்ற முன்னதெதுவுமில்லா திருப்பதால், அதுவும் செயலற்று அழிந்துவிடுகின்றது. நல்லறிவிழந்தவன் அழிந்தவனுகின்ருன். அறிவே ஆத்மா. ஆகவே ஆசையால் அறிவிழந்தவன் உயிரிழந்தவனுகின்ருன். என்று கிருஷ்ணனல் அர்ச்சுனனுக்கு பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கிறது". இவ்வாறு சுவாமி சுத்தானந்த பாரதியார் தமக்கு, கண்டி சச்சிதானந்த தபோவனத்தில் சுவாமி சச்சிதானந்தா தலைமையில் அளித்த வரவேற்பில், "கீதையின் செய்தி" என்ற தலையங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எம் உள்ளத்தில் தோன்றும் ஒரு கெட்ட எண்ணமே முடிவில் எம் அழிவிற்கே காரணமாகின்றது. இவற்றிற்கெல்லாம் காரணமாயிருப்பது விருப்பு வெறுப்பு என்ற இருமை நிலைக்குட்பட்டு விடுதலே என்ருர்.

---

## உடல் பிடிக்கும் நிலையத்தில் சோதனை

### பெண்ணுக்கு ரூ. 500 அபராதம்

கொழும்பு, சனி

விபசாரச் சட்டத்தின்கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட செல்வி டோரிஸ் பெர்ணண்டோ என்ற பெண்ணுக்கு கொழும்பு தெற்கு மஜிஸ்டிரேட் ரூ. 500 அபராதம் விதித்தார். கடந்த மே மாதம் ஹவ்லக் ரோட்டில் "உடல் பிடிக்கும் நிலையம்" எனக் கூறப்பட்ட ஒரு வீட்டை வெள்ளவத்தை பொலிசார் திடீர் சோதனையிட்டதின்விளைவாக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

---

## நாஸர் கொலை முயற்சி

### அடுத்த வாரம் பகிரங்க விசாரணை

கெய்ரோ, டிச. 2

ஜனதிபதி நாஸரைக் கொலை செய்யச் சதிசெய்ததாய்க் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் 4 பிரெஞ்சுக்காரர்களும் அடுத்த வாரம் நீதிமன்றத்தில் பகிரங்கமாக விசாரிக்கப்படுவார்கள் எனக் அறிவிக்கப்படுகிறது.

---

# கல்லாலும் பொல்லாலும் தாக்கி காயம் விளைத்தனராம்

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

சூராவத்தையைச் சேர்ந்த நாகமணி முத்துக்குமாரு, செல்லப்பன் பூபாலசிங்கம் ஆகிய இருவரும் அதே ஊரைச் சேர்ந்த கணபதி செல்லப்பா என்பவரைப் பொல்லாலும், கல்லாலும் தாக்கி படுகாயம் விளைவித்ததாக சுன்ளுகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி இரு எதிரிகளையும் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பை ஒத்திவைத்தார்.

கணபதி செல்லப்பா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி மாலை 6-30 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டில் இருந்தோம். அப்பொழுது ரயில்வேபாதையில் ஏதோ சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தோம். அவ் வேளையில் இரண்டாவது எதிரியான பூபாலசிங்கம் "இரத்தினத்துக்கு நீ அப்படியா?" எனக் கேட்டுக் கொண்டு என்னை ஏசினர்.

"நான் முன்பு ஒருவழக்கில் எதிரியாக குற்றம் சாட்டப்பட்டிருந்தேன். அவ்வழக்கில் தான் இரண்டாவது எதிரியின் சொந்தக்காரரான இரத்தினம் என்பவரைத் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக பொலிசார் குற்றம் சாட்டி இருந்தனர். அவ்வழக்கில் என்னை குற்றவாளியாகக் கண்டு அபராதம் விதிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரி என்னைப் பேசியதும் நான் அவ்வழக்குபற்றி ஒன்றும் கதைக்க வேண்டாம் என்றும் அது எல்லாம் முடிந்த விஷயம் என்றும் கூறினேன்.

இச் சம்பவம் நடைபெற்ற இரண்டு நிமிடத்திற்குள் முதலாம், இரண்டாம் எதிரிகள் மீண்டும் திரும்பிவந்தனர். முதலாம் எதிரி தான் வைத்திருந்த பொல்லால் என்னை அடித்தார். இரண்டாவது எதிரி கல்லால் தாக்கினர். நான் கதறிக்கொண்டு ஓடினேன்".

நீதிபதி எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறும்வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் திரு. ரி. தம்பிரத்தினம் ஆஜரானர். பிராசிக்கியுசன் தரப்பில் ஏ. ஜே. கலன்சூரியா ஆஜரானர்.

---

## புலோலி கிராமசபை தேர்தல்; 7 வட்டாரங்களில் போட்டியில்லை

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி கிராமச்சங்கத்தின் 12 வட்டாரங்களில் 7 வட்டாரங்கட்கு தற்போதைய தலைவர், உபதலைவர் உட்பட அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர்.

1-ம், 2-ம், 3-ம், 6-ம், 7-ம், 9-ம் வட்டாரங்கட்கு முறையே மு. தம்பிராசா, தா. க. சுப்பிரமணியம், வீ. வேலுப்பிள்ளை (உபதலைவர்), வே. பொன்னையா, செ. மர்ணிக்கவாசகர் (தலைவர்) த. சிதம்பரப்பிள்ளை, க. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போட்டியிடுவோர் விபரம்.

**4-ம் வட்டாரம்**

சி. சிற்றம்பலம்
வே. பொன்னையா

**5-ம் வட்டாரம்**

க. சுப்பிரமணியம்
க. தங்கராசா

**8-ம் வட்டாரம்**

வை. தம்பு
க. கந்தையா

**11-ம் வட்டாரம்**

வி. நல்லையா
செ. இராசையா

**12-ம் வட்டாரம்**

எம். இராசலிங்கம்
சி. வைத்திலிங்கம்
வ. சோமசுந்தரம்.

---

## எதிரியைக் கைது செய்ய வாரண்ட்

மாவிட்டபுரம், ஞாயிறு

இளவாலையைச் சேர்ந்த சி. எஸ். நாயகம் என்பவரைப் பய முறுத்தியதாக அதே ஊரைச் சேர்ந்த பிலிப் ஞானதியம் என்பவர் மீது குற்றம் சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் திரு. வெஸ்ட்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி கோர்ட்டுக்குச் சமுகமளியாது ஓர் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை கோர்ட்டுக்கு அனுப்பியிருந்தார். வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவே நீதவான் அவ்வத்தாட்சிப்பத்திரத்தை நிராகரித்து எதிரியைக்கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கும்படி பொலிசாருக்குக்கட்டளையிட்டார்.

---

## மூதூரில் கூட்டுறவு வங்கி

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலைக் கூட்டுறவு வங்கிக் கிளை ஒன்றை மூதூரில் விரைவில் திறந்து வைப்பதென திருக்கோணமலைக் கூட்டுறவு வங்கி டைரக்டர்கள் திருமலைமாவட்ட அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்டிவின்ட் தலைமையில் கூடித் தீர்மானித்துள்ளனர். தற்பொழுது திருமலையில் உள்ள வங்கியில் தனிப்பட்டவர்கள் கணக்கு வைக்க அனுமதிப்பதென்றும் அடவு வங்கியொன்று நிறுவுவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. செயற்குழுவின் அனுமதியின்றி வியாபாரக்கடன் ஒருவருக்கு வழங்கியதுபற்றி டைரக்டர்களில் ஒருவரான திரு. எஸ். கைலாசபிள்ளை கிளப்பிய பிரச்னைக்கு தவறுதலாக அக்கடன் அளிக்கப்பட்டதென்றும் இனிமேல் அப்படி நடைபெருதெனவும் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்டிவின்ட் உறுதி கூறினர்.

---

## ஆசிரியை இடமாற்றம்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் பல வருடங்களாகக் கடமையாற்றிய பயிற்றப்பட்ட ஆசிரியை திருமதி தே. பாக்கியம் வித்தியாபகுதியினரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திருமதி பாக்கியம் கொழும்பு விவேகானந்த சபையாரால் நடத்தப்பட்ட விவேகானந்த வித்தியாசாலையில் ஆசிரியையாக நியமனம் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மணி வாக்கு

மகிழ்ச்சியுடன் செய்யும் சேவையானது மற்றெல்லா இன்பங்களிலும் உடைமைகளிலும் பார்க்க மேலானது.

—காந்திஜி

ஈழநாடு

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ19 உ (4-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## தேசிய சேவை

நாடு மேன்மையுற்று விருத்தியடைவதற்கு இளைஞர்களும் தங்கள் பங்கை உதவ வேண்டியதன் அவசியத்தைக் கல்விமந்திரி ஜனுப். பதியுதீன் மாமூத் தேசிய சேவைத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கின்றூர். தெஹிவளையிலுள்ள மகாவித்தியாலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை தேசியசேவைத்திட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. நாடு விருத்தியுறுவதற்கு இத்திட்டம் பெரிதும் உதவுமென்பது இதனை வகுத்தவர்களின் நம்பிக்கையாகும். இலங்கையிலுள்ள சகல பள்ளிக்கூடங்களும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து தேசியசேவையில் ஈடுபட்டு உழைக்கவேண்டுமெனக் கல்விப்பகுதியினர் அறிவித்திருக்கின்றனர். ஆண், பெண் என்ற பாகுபாடின்றி இருதரப்பினரும் இதிற் சேர வேண்டியவர்களாகின்றனர்.

அடுத்தவருடத்தில் சுமார் 1000 பள்ளிக்கூடங்கள் தேசிய சேவையில் ஈடுபடுமெனவும் 1962-ம் ஆண்டு முடிவடைவதற்குள் எல்லாப் பள்ளிக்கூடங்களும் இதிற் சேர்ந்துகொள்ளுமெனவும் கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றூர். இதேவேளையில் ஆசிரியர்களுக்கும், மேல் வகுப்பு மாணவர்களுக்கும் தேசிய சேவைத் திட்டம் செயற்படவேண்டிய முறைகளில் போதிய பயிற்சி அளிக்கப்படும். நிலத்தைச் சமன் செய்தல், விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், கிணறு கட்டுதல், வீதி அமைத்தல் போன்ற பலதுறைகளில் இவர்கள் பயிற்சி பெறுவார்கள்.

இத்திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஓராண்டில் குறைந்தது இருநூறு ரூபாய்வரை சேமிக்க கூடுமெனச்சொல்லப்படுகிறது.

இன்றைய குழந்தைகளே நாட்டின் எதிர்காலப்பிரஜைகளாவர். இளம் உள்ளங்களில் தேசியப்பற்றை வளர்ப்பதற்கும் 'நாம் இருக்கும் நாடு நமதே' என்ற உணர்ச்சியை வேரூன்றச்செய்வதற்கும் இத்தகைய திட்டங்கள் உதவுமென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் இது மிகுந்த ஆராய்வுடனும் பொறுப்புடனும் கையாளப்படவேண்டியகாரியமாகும். 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்பது போல தெஹிவளையில் மாணவர்கள் ஆரம்பித்துள்ள தேசிய சேவை வெற்றிகரமாக நடைபெறுதாயின் அதன் விளைவுகள் முழுத்திட்டத்தையுமே பாதித்துவிடவும் கூடும். மாணவர்களின் உற்சாகத்துக்கும் உணர்ச்சிக்கும் பங்கம் ஏற்படாத வகையில் இத்திட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் நடந்து கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றனர். தொழிலின் மகத்துவத்தைப் பற்றிப்பேசுவதும் எழுதுவதும் மிக எளிது. ஆனால் அதனை மதித்து ஒழுகும் போதுதான் சங்கடங்களும் சிக்கல்களும் தோன்றி மிகுந்த சிரமங்களை எல்லாம் உண்டாக்கிவிடுகின்றன.

# பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்தால் கானு பாதிக்கப்படும்

[வில்லியம்ஸ் பாபோ]

**ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் பிரிட்டன் சேர்ந்தால் காமன்வெல்த் நாடுகளிடையே பிளவு ஏற்படும் என்றும் காமன்வெல்த் பலவீனப்படும் என்றும் அஞ்சப்படுகிறது. பெரும்பாலான சாம்ராஜ்ய நாடுகள் இவ்விதம் கருத்து தெரிவித்துள்ளன. கானுவும் இதுபோன்ற அச்சத்தைத் தெரிவித்துள்ளது. கானுவின் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் கொக்கோவாகும். சாம்ராஜய நாடுகளுக்குத் தீர்வையின்றி ஏற்றுமதியாகும். கொக்கோ வர்த்தகம் இதனுல் பெரிதும் பாதிக்கப்படும். அமெரிக்காவிலுள்ள கானு வர்த்தகப் பிரதிநிதி இவ்விஷயமாக விளக்கியுள்ள விபரங்களை இக்கட்டுரையில் காணலாம்.**

கானுவின் இப்போதைய பிரதான ஏற்றுமதிப் பொருள் கொக்கோதான். மொத்த ஏற்றுமதியில் கொக்கோவின் ஏற்றுமதி 60 சதவிகிதமாகும். காமன்வெல்த் நாடுகளுக்கு, குறிப்பாகப் பிரிட்டனுக்கு எவ்விதத் தீர்வையும் செலுத்தாமல் கானுவின் கொக்கோ ஏற்றுமதி செய்யப்படுகிறது. பொது மார்க்கெட்டில் பிரிட்டன் சேர்ந்தால் கானுவும் இதர காமன்வெல்த் நாடுகளும் பாதிக்கப்படும். சமீபத்தில் கானுவில் நடைபெற்ற காமன்வெல்த் நிதியமைச்சர்கள் மகாநாட்டில் பிரிட்டன் ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் சேர்ந்தாலும் பாரம்பரிய வர்த்தகங்களுக்கு பாதுகாப்பளிக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டிருந்தும் பிரிட்டனுக்கும் அதேபோன்றதொரு சஞ்சலம் இருக்கத்தான் செய்யும். பிரிட்டனின் நடவடிக்கை காமன்வெல்த் நாடுகளிடையே பிளவை உண்டுபண்ணலாம். காமன்வெல்த் உறவுகள் மிகவும் பயன்தரத்தக்கவையாகும். அங்கத்துவ நாடுகள் அடிக்கடி சந்தித்து பரஸ்பரம் ஆலோசனை நடத்த வகை செய்கிறது. தகவல் பரிமாற்றங்களுக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. தேவைப்பட்ட நாடுகளுக்கு கடன்கள், மான்யங்கள் போன்ற சலுகைகளும் கிடைக்கின்றன. இதர காமன்வெல்த் உறுப்பினர்களின் கோரிக்கைகளைப் பிரிட்டன் செவிசாய்க்கும். புதிதாகச் சுதந்திரம் பெற்ற பிரெஞ்சு ஆபிரிக்க நாடுகளின் பல பொதுமார்க்கெட்டில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றன.

### புதிய பாதை

பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் பொது மார்க்கெட்டில் இணைந்தால் பிரெஞ்சு ஆபிரிக்க நாடுகள் அவற்றைக் காட்டிலும் விசேஷ அந்தஸ்தைப்பெற நேரிடலாம். பொருளாதாரத் துறையில் புதிய பாதையில் செல்ல கானு முனைந்து வருகிறது. 1959ம் ஆண்டில் ஆரம்பமான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரப்பர், கோப்பி, நவதானியங்கள் முதலிய பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்யக் கானு திட்டமிட்டுள்ளது. இப்போது இறக்குமதி செய்யப்படும் ஜவுளிகள், போத்தல்கள், வர்ணம், கட்டிட தளபாடச் சாமான்கள், புட்டிகளில் அடைக்கப்பட்ட உணவு ஆகியவை கானுவிலிருந்தே தயாரிக்கப்படும். மேலும் தொழிற்சாலை சாதனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்யக் கானு முனைந்துள்ளது. தொழிற் துறையை அபிவிருத்தி செய்வது எங்ஙனம் என்பதற்கு அமெரிக்காவின் புட்டி அடைப்பு சாதன ஒப்பந்தம் ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த நிறுவனம் கானுவில் புட்டிகளை உணவு அடைக்கும் தொழிற்சாலையை நிறுவிக் கொடுத்துள்ளது. அத் தொழிற் சாலையில் கானு மக்களே வேலை பார்க்கின்றனர். மேலும் கானு மக்களைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக்குவதற்கும் அந்த நிறுவனம் உதவுகிறது. அந்நிய செலாவணிக்குச் சிறந்த ஏற்றுமதி வசதிகளையும் செய்து தருகிறது. வர்த்தகத் தொடர்புகளை இயன்றவரை அபிவிருத்தி செய்யவே கானு விரும்புகிறது. சர்வதேச வர்த்தகக் கொள்கையை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஜப்பானுடன் வர்த்தகம் செய்துவரும் கானு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து ஜவுளியைப் பெறுகின்றது. அமெரிக்காவுடனும் கானு வலுவான வர்த்தகத்தைப் பெற்றிருக்கின்றது. அங்கிருந்து இயந்திரங்களையும் சாதனங்களையும் பெற்று அவற்றின் மூலம் மாங்கனீஸ், மரம், கொக்கோ முதலியவற்றைக் கானு ஏற்றுமதி செய்கிறது. சோவியத் ரஷ்யாவுடன் வரம்புக்குட்பட்டிருந்த வர்த்தகத்தை விரிவு படுத்தவும் கானு முயற்சித்துக் கொண்டு வருகிறது. கொக்கோவை ரஷ்யா பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக இயந்திர சாதனங்களைப்பெற கானு விரும்புகிறது. கானுவில் முதலீடு செய்யும் ஆர்வம் அமெரிக்காவில் அதிகரித்திருக்கிறது. ஆபிரிக்க நாடுகள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவும் சிறந்த பொருளாதார நிலைமைகளை உருவாக்கவும் தனியார் மூலதனம் அவசியம் என்பதை அவை உணர்ந்திருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார விருத்திக்குத் தேசிய சேவைத்திட்டம் சிறிதளவேனும் உதவுமாயின் அதுவே பெரும் பேறுகும்.

# "தமிழும் சைவமும் ஆதி அந்தமில்லாதவை"

## வவனியாவில் கவியோகி உரை

## சுத்தானந்தருக்கு பௌத்தபிக்கு பாராட்டு

வவனியா, ஞாயிறு

"இன்று உலகம் கொந்தளிக்கின்றது. அதே நேரத்தில் உலக சமாதானத்துக்கு ஏதாவது வழி உண்டா என்ற வினுவும் எழுகின்றது. உலக சமாதானத்துக்கு சமயம்தான் ஒரேயொரு வழி என்பது எனது திடமான அபிப்பிராயம். சமயங்களிடையே ஒருவித வேற்றுமையும் கொள்ளாது சமயத்தில் பற்றுக் கொண்டு வாழ்வோமாயின் உலகக் கொந்தளிப்புத் தானகவே நீங்கி நிரந்தர சமாதானம் உண்டாகும்."

இவ்வாறு கவியோகி சுத்தானந்தபாரதியார் வவனியா பட்டினசபை மண்டபத்தில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட உபசாரக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

கவியோகி மேலும் கூறியதாவது:

நான் உலகம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து பல சமய மக்களையும் பல சமயப் பெரியார்களையும் சந்தித்து உரையாடியிருக்கின்றேன். இதில் இருந்து யான் கண்ட உண்மை கடவுள் ஒருவன் என்பதுதான். எல்லாச் சமய உண்மைகளும் கடைசியில் ஒன்ருகத்தான் இருக்கின்றது. இக்கருத்தை உலகத்தில் உள்ள சகல சமய மக்களும் உணர்ந்து வாழ்வோமாயின் நமக்குள்ளே இருக்கும் பிளவுகள் குரோதங்கள் நீங்கி உலகத்தில் நிரந்தர சமாதானமும் சுபீட்சமும் நிலவும் உலகத்தைக் கட்டியாளக் கூடிய சக்தி சமயத்துக்குத்தான் உண்டு. தமிழும் சைவமும் அழிந்துவிடாது. இவை ஆதியும் அந்தமும் இல்லாதவை. இவற்றை ஒருவராலும் அழிக்க முடியாது. உலகத் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய அரும் பெரும் சேவைகள் பல உள. அவை தமிழையும சைவத்தையும் வளர்த்துச் சென்ற பெரியார்களையும் அவர்களுடைய அரும் பெரும் நூல்களையும் தற்பொழுது அச்சேவையைச் செய்து கொண்டிருப்பவர்களுடைய நூல்களையும் பிரசுரித்து ஒவ்வொரு வீட்டிலும் பேணி வைத்து அவற்றை நன்கு பாராயணம் செய்து அவ்வழி நின்று ஒழுகுதலே. இவற்றை உங்கள் தலையாய கடனுகக் கொள்ளுங்கள். இலங்கையில் பல நூல்களில் உள்ள பொது நூல்நிலையங்களில் மேற்கூறிய நூல்கள் இல்லாமை கண்டு யான் பெரிதும் வருந்தி, இக்குறையை இனியாவது பூர்த்தி செய்யுங்கள் என்று பல அன்பர்களிடம் கூறியுள்ளேன். என் இவ் ஆசையை இலங்கைத் தமிழ் மக்கள் அதிவிரைவில் பூர்த்தி செய்வார்களென்றே நம்புகின்றேன். தமிழ் மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் சமயகுரவர்கள் தேவார திருவாசகங்கள் புராணங்கள் மற்றும் சமயங்கள் எல்லாம் இருக்க வேண்டும். சிறுவபதில் இருந்தே

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

"ஒன்றை நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும் எல்லாம்எனையாளும்ஈசன்செயல்." ஆமாம், சற்றும் எதிர் பாராத முறையிலே மீண்டும் இந்தியா செல்ல நேரிட்டது. சந்திர மண்டலத்துக்கும் போய்சலபமாகத் திரும்பிவிடலாம். ஆனால் பக்கத்தலுள்ள இந்தியாவுக்குச் செல்னுவதென்றுல் எவ்வளவு கரைச்சல்!

எக்ஸ்சேஞ்ச் பர்மிட் கந்தோர் பக்கம் எட்டியும் பார்க்க வேண்டாமென்றுவிட்டார் நண்பர். எவ்வளவு தலைபோகிற காரியமாக இருந்தாலும் சரி, விமான யாத்திரைக்கும் பர்மிட்தரமாட்டார்களென்றும் எவ்வளவோ செல்வாக்குள்ளவர்களெல்லாம் முயன்றும் முடியாததால், வீண் பிரயாசைப் படத் தேவையில்லை என்றும் நண்பர் கூறியதால், ரயில் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்தேன்.

நல்லவேளை, ரயிலிலாவது செல்ல அனுமதிக்கிறூர்களே! அதுவும் 5 வருஷம் அல்லது 10 வருஷத்துக்கு ஒரு முறை தான் செல்லலாமென்ருல் நாம் என்ன செய்ய முடியும்!

இந்திய ஹைகமிஷனில் சுலபமாக ஐந்து நிமிடங்களுக்குள் விஸா கிடைத்துவிட்டது. அடுத்தபடி, கூப்பன் ஆபீஸ் படலம். அங்கு சென்றேன். சங்கக் கடையில் "பி" துண்டு இருப்பதாயும், அதையும் வாங்கிவர வேண்டுமென்று ஓடர் போட்டனர். அன்றே அவசரமாகப் புறப்பட வேண்டும். என்ன செய்யலாம், ஓடர் என்றுல் ஓடர்தானே. "பி" துண்டு எடுத்து, ஓர் அன்பரிடம் கடிதம் எழுதிக்கொடுத்து "இதைக் கொண்டு வருபவரிடம் ரசீது அனுப்பி வையுங்கள்"என்று கேட்டேன். "நீர்தான் அந்தஆசாமி என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? பெயர், கையெழுத்துடன் கடிதம் வாங்கி வருவதுடன், உம்மை அடையாளம் கண்டுபிடித்துக் கூற யாராவது நம்பிக்கையானவரை அழைத்துவந்தால்தான் ரசீது தரமுடியும் என்றுபெரிய ஓடர் போட்டாராம் அந்த குட்டி அதிகாரி!

நல்ல வேளையாக மேலதிகாரியிடம் இதைப்பற்றி முறையிடவே, அவர் தயவு செய்து, தமக்கு என்னையும் அன்பரையும் தெரியுமென்றும், ஆகவே கொடுக்கலாமென்றும், கூறவே பிறகு மிகவும் தயக்கத்துடன் குட்டி அதிகாரி ரசீது வழங்கினூராம். பல கந்தோர்களிலும் குட்டி அதிகாரிகளின் தர்பார்தானே நடக்கிறது.

* * *

அன்பர் 'சூட்'போட்டுச் சென்றிருந்தார். அதனுல் சற்று மரியாதையாக ஆங்கிலத்தில் பேசினுர்களாம், ஆனுல் வேட்டிகட்டி ஆங்கிலமும் தெரியாதவராக இருந்தால், "ஏய் என்ன மடையன் மாதிரி அப்படி நிற்கிறே. வா இப்படி..." என்று மிகத் திமிருடன் ஏசியும் பேசியும் செய்வதாயும், வேறு விதியில்லையே என்று பதில் பேசாமல், அம்மக்கள் இந்த அவமதிப்பை பொறுப்பதாயும் தெரிவித்தார் அன்பர்.

இந்தச் சம்பளச் சிப்பந்திகள், பொதுக்க்களின் "கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களாவர்" பொது மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்தே இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. 'சூட்' போடாத பொது மக்களை இப்படி இச்சுதந்திர நாட்டிலே அலட்சியமாகப் பேசிநடத்துவது, அக்குட்டி தேவாதிகளுக்கு நல்லதல்ல. ஒரு வேளை அங்கு வரும் இந்தியத் தமிழர்களுக்குத்தான் இந்த ஸ்பெஷல்மரியாதையோ!

* * *

தலைமன்னுர் ரயில், நேரம் தவருமல் 'டாண்' என்று வந்து விட்டது. கஸ்டம்ஸ் முடிந்து, தனுஷ்கோடி கப்பல் ஏறி

(4 ம் பக்கம் பார்க்க)

# நாடு கடத்தப்படுமுன் விசாரணை செய்யக் கோரிக்கை

## வழக்கு விசாரணையில் திகதிமாற்றம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாதகலைச் சேர்ந்த கதிரவேலு கோவிந்தசாமி என்பவர் 12 கள்ளக்குடியேற்றக்காரர்களுக்கு சட்டவிரோதமாகப் புகலிடம் கொடுத்ததாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் மாஜிஸ்ரேட் ஏற்கனவே இவ்வழக்கை 1-1-62 ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ள போதிலும் இவ்வழக்கு இம்மாதம் 7-ம் திகதிக்கு முன்னர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென வழக்கைத் தாக்கல் செய்த சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமார் மாஜிஸரேட்டிடம் மனுச்செய்தார்.

இன்ஸ்பெக்டர் குமார் இதற்குக் காரணம் தெரிவிக்கையில் இவ்வழக்கில் முக்கிய சாட்சிகளாயுள்ளவர்கள் இந்தியப் பிரஜைகள் என்றும் அவர்கள் இம்மாதம் 7-ம் திகதி இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியவர்களாக இருப்பதால் அவர்களின் சாட்சியம் இம்மாதம் 7-ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட வேண்டுமென்றும் அவர்களின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டபின் இரண்டாவது தவணையை எந்தத்திகதிக்கும் ஒத்திவைக்கலாமெனவும் தெரிவித்தார்.

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. செல்லத்துரை இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கையில் ஒரு வழக்கை குறித்த தவணையிலிருந்து பிந்திப் போடுவதற்கு நீதிபதியிடம் மனுச்செய்வதற்கு இன்ஸ்பெக்டர் குமாருக்கு அதிகாரமிருக்கலாமேயல்லாமல் அவ்வழக்கை குறித்த தவணையிலிருந்து முன்னுள்ள தேதிக்குப் போடுவதற்கு அதிகாரம் இல்லையெனக் கூறினர். திரு. செல்லத்துரை மேலும் ஆட்சேபனை தெரிவிக்கையில் குறித்த தவணையிலிருந்து வழக்கை முந்திப் போடுவதற்கு சட்டம் இடம்கொடுக்காதெனவும் எந்தச் சட்டத்தின்படி திரு. குமார் இந்த விண்ணப்பத்தை செய்துள்ளார் எனவும் கேட்டார். இன்ஸ்பெக்டர் குமார் அதற்குப் பதில் அளிக்கையில் தனது மேலதிகாரிகளின் கட்டளைப்படியேதான் இவ் விண்ணப்பத்தைச் செய்துள்ளதாயும் தனது விண்ணப்பம் சட்டப்படி உள்ளதெனவும் கூறினர்.

நீதிபதி இன்ஸ்பெக்டர் குமாரின் விண்ணப்பத்தை ஏற்று வழக்கை இம்மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மாஜிஸ்ரேட் தமது காரணத்தைத் தெரிவிக்கையில் "இவ்வழக்கில் சாட்சிகளாயுள்ளவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இம்மாதம் 7-ம் திகதி இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டியிருப்பதால் அவர்களின் சாட்சியம் இம்மாதம் 7-ந்திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்படவேண்டியிருக்கிறது. ஆதலால் நான் இவ்வழக்கை 6-ம் திகதிக்கு முன்போட்டு வைக்கிறேன்" என்று கூறினர்.

## தோட்டப்பாடசாலைகளை அரசாங்கமேற்கவேண்டும்

கம்பளை, ஞாயிறு

தோட்டப் பாடசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் என்ற தீர்மானம் கம்பளையில் நடைபெற்ற இலங்கை தோட்ட ஆசிரியர்கள் யூனியனின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாடசாலைகள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான பரீட்சைகள் நடைபெறவேண்டும்; தோட்டப்பாடசாலைகளில்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பாலும் பணிசும் கொடுக்கப்படல் வேண்டும். பாடசாலைகளின் தரம் உயர்த்தப்படல் வேண்டும் என்பன போன்ற தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## தமிழும் சைவமும்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றைப் பாராயணம்செய்ய வேண்டும். அப்படியாயின் பிள்ளைகட்கு இளமையிலேயே சமயத்தில் பற்றுண்டாகும்.

அடுத்து வவனியா புத்த கோவில் பிரதா குருவான வணக்கத்துக்குரிய எம். கே. குணனந்ததேரோ சிங்களத்தில் பேசினர். தாம் தமிழ் மொழியில் பேசமுடியாததையிட்டு வருந்துவதாகவும் இன்று யோகி சுத்தானந்தர் வவனியாவுக்கு வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அவரைத் தமது கோவிலுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்ற அவாபூர்த்தியானதையிட்டு மகிழ்வதாகவும் கூறினர். "நாமும் எங்கள் கோவிலில் புத்தபிரானுடன் விஷ்ணு, விஞயகர், கந்தசாமி யாரை வைத்து வணங்குகிறேம். எங்கள் புத்த சமயத்துக்கும் இந்துசமயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. யோகி சுத்தானந்தர் என் முன்னிலையில் புத்த பிரானை வணங்கியது அவர் பக்தித்திறனையும் மறுசமயங்களில் உள்ள அன்பையும் எடுத்துக் காட்டுகிறது" என்றும் தேரோ கூறினர்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த வவனியா பட்டின சபைத் தலைவர் திரு. எஸ. சுப்பிரமணியம் தமது உரையில் அடியார்கள் செய்து வரும் சமயத் தொண்டைப் பாராட்டி எங்கள் நாட்டுக்கு அடிக்கடி வந்து இப்பேற்பட்ட அரிய சொற்பொழிவைத் தருமாறு வேண்டிக் கொண்டார்.

## ஐயாறன்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

னேன். அங்கு வரிசையாக ஏழெட்டு மேசைகள் போட்டுள்ளனர். ஒவ்வொரு மேசையிலும் இரண்டு அதிகாரிகள். அவர்கள் என்ன அதிகாரிகளென்பதற்கு 'போர்ட்டு' கூட இல்லை. எல்லாரிடமும் நின்று நின்று பாஸ்போர்ட் காட்டி, பல பாரங்களையும் நிரப்பி, கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லி ஒவ்வொருவரிடமும் அனுமதி பெறவேண்டும்.

பத்திரிகைக்காரனென்ருல், அதிக கேள்விகள். என்ன பத்திரிகை? வேறு பத்திரிகைகளுக்கு எழுதுகிறீர்களா? எங்கே செல்லுகிறீர்? எத்தனை நாள் தங்குவீர்? என்று ஏதோ "ஐ. ஆர். ஸி." போல சந்தேகித்துக் கேட்கிருர்கள். எல்லாவற்றுக்கும் தப்பி, அமர்ந்தேன். மழையால் கப்பலெல்லாம் தெப்பம்.

அங்கு மேலே ஹாரிஸன் கம்பனியார் நடத்தும் சிற்றுண்டிச் சாலையில் காப்பி 'கம கம' என்றிருக்கிறது. 2 கப் 37 சதம் தான். உப்புமா முதலியவற்றையும் சரிக்கட்டி தருகிருர்கள். அன்று 50 பிரயாணிகள்கூட இல்லை. மேல் வகுப்பில் 15 பேர்தான். சிற்றுண்டிசாலைக்கு வியாபாரமில்லை என்றும், நஷ்டத்திலேயே நடப்பதாயும், கப்பல் கூட நஷ்டத்தில் நடப்பதால், இந்திய ரயில்வே, இந் நிர்வாகத்தை கிழக்கத்திய கப்பல் ஸ்தாபனத்தாருக்கு சில மாதங்களில் மாற்றிவிட இருப்பதாயும், அங்கு ஓர் அன்பர் தெரிவித்தார். விஸா, பிரயாண கெடுபிடி காரணமாகவே, இந்த நிலை. போர்டர் முதலியவர்களுக்கும் போதிய வருமானமில்லை இந்தியா - இலங்கை யாத்திரைத் தடைகளை எப்போதுதான் தளர்த்துவார்களோ!

## பர்மியப் பிரதமர் அரசியலிலிருந்து ஓய்வு

ரங்கூன், டிச. 1

"இந்தியாவுக்குச் சென்று பௌத்த மதத்தை நான் பரப்பவிருப்பதால் அடுத்தபொதுத் தேர்தல்களுக்கு முன்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வேன்,"

இவ்வாறு நேற்று பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பர்மியப் பிரதமர் திரு. ஊநூ பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: "பௌத்த சமயத்தின் பிறப்பிடம் இந்தியாதான். நமது மதத்தை பரப்புவதற்காக நாமெல்லோரும் இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டும். பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்கம் எனக்குஇன்று மட்டும் வரவில்லை. சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் "திறி ஜுவல்ஸ்" என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்றும் பொழுதே பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்கம் இருந்தது.

## அமெரிக்க மோட்டர்கள்

வாஷிங்டன், டிச 2

அமெரிக்க மோட்டார் கார்களின் 1962 தயாரிப்புக்கல் பெரும்பாலும் அக்டோபரில் பொதுமக்களுக்குக் காட்டப்பட்டன. இந்தப்புது மாடல்களில் புகுத்தப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள் எண்ணெய் மாற்றுவது, மசகெண்ணெய் போடுவது முதலியவற்றில் மாற்றங்களாகும்.

ஆண்டுக்கு இரு தடவை சிறு மசகும், 30,000விருந்து 33,000 மைலுக்கு ஒருதடவை பெரிய மசகும் போட்டால் போதும். சில மாடல்களில் தானே பொருத்திக் கொள்ளும் பிரேக்குகள் இருக்கின்றன. சில சிறிய கார்களில் கிளட்ச் இல்லாமல் தானே கீயர் மாற்றிக் கொள்ளும் அமைப்பும், கிளட்ச் பெடல் இல்லாத ஸ்டிக்கீயர் ஷிப்ட்டும் புது அம்சங்களாகும்.

## பேசும் இயந்திரம்

வாஷிங்டன், டிச. 2

இப்பொது அமெரிக்காவின் வர்த்தக, தொழில், விஞ்ஞான, அரசாங்க அலுவலகங்களில் இயங்கும் 5000 கணக்கிடும் இயந்திரங்களில் 45 சதவிகிதத்துக்கு மேல் 500-க்கு மேற்பட்ட கம்பெனிகள் உபயோகிக்கின்றன. வர்த்தகத் துறையில் இயங்கும் கணக்கிடும் இயந்திரங்கள் பல ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது கிளை விற்பனை அலுவலகம், கிடங்கு, தொழிற்சாலை, ஆய்வுக்கூடம் முதலியவற்றிலுள்ள கணக்கிடும் இயந்திரங்கள் தலைமை அலுவலகத்திலுள்ளவற்றுடன் பேசுசின்றன. டெலிடைப்பைப் பயன்படுத்தி சாதாரணத் தொலை பேசி கம்பிகள் மூலம் பேசுகின்றன. மொழி பெயர்க்கும் மின்அணு கருவியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு கணக்கிடும் இயந்திரத்தின் மொழியை வேறு ஒரு கணக்கிடும் இயந்திரத்தின் மொழிக்கு மாற்றுகிறது. இதனல் மாறுபட்ட கணக்கிடும் இயந்திரங்கள்கூட ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளலாம்.

## கிரிக்கெட்

கான்பூரில் இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்குமிடையேநடைபெற்றுவரும் 2-வதுகிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நேற்று ஆட்ட இறுதிவரை இந்தியா தன் முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 437 ரன்கள் எடுத்திருந்தது. உம்ரிகார் 132ரன்களெடுத்து ஆட்டம் இழக்கவில்லை.

## நிரந்தர பல்வைத்தியர் வேண்டும் வடமராட்சிமக்கள் வேண்டுகோள்

உடுப்பிட்டி, வெள்ளி

"பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய இரு பெருந்தொகுதிகளுக்கும் தனியொரு அரசாங்க வைத்திய சாலையாகவுள்ள மந்திகை அரசினர் வைத்திய சாலையில் ஒரேயொரு பல் வைத்தியர் உள்ளார். இவர் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் மட்டும் தினசரி காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை இவ்வைத்தியசாலையில் தங்கிக் கடமையாற்றுவார். மருதங்கேணி, அம்பம், குடத்தனை, மணற்காடு ஆகிய போக்குவரத்து வசதியுள்ள தூரமான இடங்களிலிருந்து வரும் நோயாளிகள் அநேகமாக வைத்தியரைக் காணுது ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியுள்ளது."

இவ்வாறு பல பிரமுகர்கள் ஒரு மகஜரை பருத்துத்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்திடம் சமர்ப்பித்தனர்.

கூடிய விரைவில் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் அதிகாரிகளையும் சந்தித்து ஆவன செய்வதாக திரு. துரைரத்தினம் வாக்குறியளித்தார்.

## 'பாஸ்' புத்தகம் வழங்கப்படும்

கொழும்பு. ஞாயிறு

கருவாட்டு வியாபரிகளுக்கு வழங்கப்படும் 'பர்மிட்'டுகளுக்குப் பதில் இனிமேல் 'பாஸ்' புத்தகங்கள் வழங்க கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் முடிவுசெய்துள்ளது. நம்பிக்கைக்குப்பாத்திரமான வியாபாரிகளுக்கு மட்டும் அளிக்கப்படவிருக்கும் வர்த்தக சலுகைகளை முன்னிட்டே இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வியாபாரிகளுக்கு வழங்கப்படும் 'பர்மிட்'டுகள் யாவற்றையும கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ரத்துச் செய்துள்ளது. நம்பிக்கையுள்ள வியாபாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 'பாஸ்' புத்தகங்களை வழங்குவதில் கூ. மொ. வி. ஸ்தாபனம் முனைந்துள்ளது.

வியாபாரிகளுக்கான இந்தப் 'பாஸ்' புத்தகங்களைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கருவாட்டுப் பகுதியும், அதன் கிளைப் பகுதிகளும் வழங்கும்.

தற்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மாதம் ஒன்றுக்கு 40,000 அந்தர் கருவாட்டை இறக்குமதி செய்கிறது.

## ஷோம்பே

பிரேஸில்வில்லி, டிச. 2

கடாங்கா தலைவர் ஷோம்பே முன்னுள் பிரெஞ்சு காங்கோவின் தலைநகரான பிரேஸில்வில் சென்றிருக்கிருர் என்றும், அங்கு காங்கோ பிரதமர் அடோலாவைச் சந்திக்க முயற்சி செய்து வருகிருர் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாண்ம் மத்தியகல்லூரியிலிருந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர் திரு. கே. மகாலிங்கத்திற்கு மத்தியகல்லூரில் ஓர் பிரிவுபசரம் நடாத்தப்பட்டது. இதற்கு ஆசிரிய வட்டாரத் தலைவர் திரு. எஸ. மகாலிங்கம் தலைமைவகித்தார். காரியதரிசி திரு. ஜெயரத்தினசிங்கம் மாற்றலாகிச் செல்லும் ஆசிரியருக்கு ஓர் பணமுடிப்பை வழ்ங்கினர்.

பிரதம பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. எஸ். வேலுப்பிள்ளை திரு. ஏ. ஈ. தம்பர் ஆகியோரும் அவரது சேவையைப் பாராட்டிப் பேசிவர். தேனீர் விருந்தும் நடைபெற்றது.

## தொழிலாளர் யூனியன் மகாநாடு

ஹட்டன், ஞாயிறு

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியன் வருடாந்த மகாநாடு இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறும்.

ஹட்டன் ஹைலேண்ட்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இம்மகாநாடு, முதல்நாள் ஆரம்பமாகி அடுத்தநாட் காலை வரை தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மகாநாட்டில் சுமார் 500 பிரதிநிதிகள் பங்கு பற்றுவார்கள் என நம்பப்படுகிறது. இரண்டாம் நாட்காலை விளையாட்டுகளும், பொதுக்கூட்டமொன்றும் நடைபெறும்.

## 64வெட்டுக்காயங்கள்!

பதுளை, ஞாயிறு

பதுளை எட்டம்பிட்டியா தோட்டத்தைச் சேர்ந்த கண்டக்டரும் தலைமைக் கங்காணியுமான திரு. ஏ. டி. எஸ். வேலுப்பிள்ளை கொலை வழக்கு, பதுளை மாஜிஸ்திரேட் திரு. ஜே. பி. சி. சுவிரிஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இறந்தவரான திரு. வேலுப்பிள்ளையை அதே தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி சிவன் என்பவர் எவ்வாறு கொலை செய்தார் என்பதை சாட்சி திரு. கதிரவேல் கூறினர்.

தேயிலைச் செடிகளின் மத்தியில் கிடந்த திரு. வேலுப்பிளையின் உடலில் சுமார் 64-க்கு மேற்பட்ட வெட்டுக் காயங்கள் இருந்தன. அவரின் முகம் வெட்டப்பட்டு கிடந்தது. சாட்சிகளின் வாக்குமூலங்களுக்குப் பின்னர், வைத்திய பரிசோதனைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஆட்டிறைச்சிக்குப் பதில் நாயிறைச்சியா?

கண்டி, ஞாயிறு

"கண்டி மார்க்கெட்டில் ஆட்டிறைச்சிக்குப் பதிலாக நாயிறைச்சி விற்கப்படுகிறதா?" என்றதொரு கேள்வியை அண்மையில் நடைபெற்ற கண்டி மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் அங்கத்தவர் திரு. ஜி. பி. டி' சில்வா கேட்டார்.

இதுபற்றி திரு, ஜி. பி. டி' சில்வா பின்வருமாறு குறிப்பிட்டார்:- "கண்டியிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள அக்குறனை என்ற இடத்தில் அண்மையில் பொலிசார் சோதனையிட்டபொழுது, 20 நாய்களின் தலைகளும், இரண்டு மாடுகளின் தலைகளும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. இதிலிருந்து கண்டி மார்க்கெட்டில் ஆட்டிறைக்சிச்குப் பதிலாக நாயிறைச்சி விற்கப்பட்டிருக்கலாம் என்று நம்பமுடிகிறது."

## தங்கக்கட்டிகள் பறிமுதல்

மன்ஞர், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு படகொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த இரு நபர்களிடமிருந்து ஐந்து தங்கக்கட்டிகளை தலைமன்ஞர் சுங்க இலாகாவைச் சேர்ந்த திரு. ஏ. என். தர்மராஜா, திரு. எவ். பொன்னையா ஆகியோர் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ம் இந்த 5 தங்கக்கட்டிகளுட சுமார் ரு. 15,000 பெறுமதியுள்ளது.

## ஜெனிவா பேச்சுவார்த்தை மீண்டும் முட்டுக்கட்டை

ஜெனிவா, டிச. 2

அணு ஆயுத சோதனைத் தடை சம்பந்தமாக ஜெனிவாவில் மீண்டும் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளில் நேற்று முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அமெரிக்க, பிரிட்டிஷ் தலைமைப் பிரதிநிதிகள் மகாநாட்டிலிருந்து தங்கள் நாடுகளுக்குத் திரும்புவதற்குத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. எனினும் பேச்சுவார்த்தை முறிந்துவிடவில்லையென்றும் தலைமைப் பிரதிநிதிகளின் உதவியாளர்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவரென்றும் அறிவிக்கப்பட்டது.

---

## ரப்பர் உற்பத்தியில் இலங்கைக்கு 4 வது இடம்

கொழும்பு, ஞாயிறு

ரப்பர் உற்பத்தியில் இலங்கை 4வது ஸ்தானம் வகிக்கிறது. மலாயா, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் முறையே 1வது, 2வது, 3வது ஸ்தானத்தை வகிக்கின்றன.

## மோட்டார் மோதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பளையைச் சேர்ந்த தம்பையா கோவிந்தபிள்ளை (வயது 50) என்பவர் மோட்டார் வாகனமென்றினால் மோதுண்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார். மனை ரோட்டில் மாடு கொண்டுசென்ற இவரை மோட்டார் வாகனம் மோதியதாகவும் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரெனவும் தெரிகிறது.

---

## காணமற்போன திறப்புக்கோர்வை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்தமாதம் 7ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற கேகாலை யாழ்ப்பாணக் கோஷ்டிகள் உதை பந்தாட்டப் போட்டியின்போது ஒரு திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டது. இதுவரையில் எவரும் கோரிக்கை விடுக்கவில்லையாம். மாவட்ட நீதிமன்ற விகிதர் திரு. ஆர். காசிநாதர் அதனை எடுத்துவைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## உதைபந்தாட்டப் போட்டி

வேலணை, வெள்ளி

வேலணை மத்திய மகாவித்தியாலய 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் இடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 'பி' பிரிவுக் கோஷ்டியினர் 6-0 கோல்களால் வெற்றி பெற்றனர்.

திரு. கே. சம்பந்தர் மத்தியஸ்தம் வகித்தார்.

---

## கிராமசபையின் கோழிப்பண்ணை

திருகோணமலை, ஞாயிறு

விவசாயப் பண்ணை, கோழிப் பண்ணை நிறுவுவதற்கென சாம்பல்தீவு கிராமச் சபை 3 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இப்பண்ணைகளைக் கவனிப்பதற்கென ஓர் உத்தியோகத்தரையும் நியமனம் செய்துள்ளது.

---

## 'ஏர் இந்தியா'

புதுடில்லி, நவ 30

விமானசேவையின் "ஏர் இந்தியா இன்டர்நேஷனல்" என்ற "ஏர் இந்தியா" என மாற்றப்படும் என அறிவிக்கப்படுகிறது.

# உப்புவெளி கிராமசபையில் ஏகாம்பரத்தின் உருவப்படம்

## திருமலை எம்.பி. திரைநீக்கம் செய்வார்

திருக்கோணமலை, சனி

காலஞ்சென்ற திருமலை நகர சபைத்தலைவர்களான திரு. த. ஏகாம்பரம், திரு. மு. தாமோதரம்பிள்ளை ஆகியவர்களின் உருவப்படங்களை உப்புவெளிக் கிராமச் சபைக் கட்டடத்தில் மார்கழி மாதம் 15-ம் திகதி திறந்துவைப்பதெனவும் திரைநீக்கம் செய்துவைக்க திருமலை எம். பி. திரு. ந. இ. இராஜவரோதயத்தை அழைப்பதெனவும் உப்புவெளிக் கிராமசபை அண்மையில் கூடிய அதன் கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. இக்கூட்டத்திற்கு திரு. என். கைலாயநாதன் தலைமை வகித்தார்.

கட்டுப்பாட்டுவிலைக்கு அதிகமாக பொருட்களை விற்கும் வியாபாரிகளிடமிருந்து ஏழை மக்களைக் காப்பாற்றவென நியாயவிலைக்கடை ஒன்றை நிறுவவும் சபை தீர்மானித்துள்ளது.

கதிர்காமத்திலிருந்து மடங்களை மாணிக்ககங்கைக்கு அப்பால் அகற்றும் திட்டத்தை எதிர்த்தும் ஓர் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

---

# ஊர்காவற்றுறை பட்டின சபை தேர்தல் முடிவு

## பெண் அபேட்சகர் தோல்வி

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறைப் பட்டின சபையின் மூன்று வட்டாரங்களுக்கான அங்கத்தவர் தெரிவுகள் நேற்று நடைபெற்றன. மூன்று வாக்குப்பதிவு நிலையங்களில் வரிஇறுப்பாளர் தமது வாக்குகளைப்பதிவு செய்தார்கள். கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெறுதுவிட்டாலும் தடைசெய்யப்பட்ட தமிழ் அரசுக்கட்சி ஆதரவாளர்களும், தனிப்பட்ட சுயேச்சைகளும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

கடந்த தேர்தலில் தோல்வியடைந்த பெண்அபேட்சகரான திருமதிம மரியாணிக்கம் இத்தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்டார்.

பின்வரும் மூவர் புதிய அங்கத்தவர்களாகத் தெரிவு செய் செய்யப்பட்டனர்:- 1-ம் வட்டாரம்: திரு. செல்வராசா, 2ம் வட்டாரம்: திரு. சிதம்பரப்பிள்ளை (ஏகமனதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டவர்.) 3-ம் வட்டாரம்: திரு. ஐயாத்துரை, 4-ம் வட்டாரம்: திரு. வி. இம்மானுவல் (ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்) 5-ம் வட்டாரம்: திரு. எஸ் எம். அல்பிரட்.

---

# ஞாயிற்றுக்கிழமைக்கு பதில் வெள்ளிக்கிழமை விடுமுறை

## பௌத்த ஆலோசனைக் கமிட்டி சிபார்சு

கொழும்பு, வெள்ளி

இப்பொழுது விடுமுறைதினமாகவுள்ள ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக போயா தினங்களை விடுமுறையாக்கவேண்டுமென்று கலாசார விவகார இலாகாவின் பௌத்த ஆலோசனைக்குழு சிபார்சு செய்யவிருககிறது.

இது சம்பந்தமாக ஆராய்வதற்கு பௌத்த ஆலோசனைக் கமிட்டியால் நியமிக்கப்பட்ட உபகுழு வருடத்தில் 65 தினங்களை வேலை செய்யாத தினங்களாக்கும் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது.

இந்த 65 தினங்களில் 50 தினங்கள் பௌத்த மத விடுமுறை தினங்களாகும். இதர ஆறு தினங்களும் தேசிய தினங்களாகும். இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதசம்பந்தமாக ஒவ்வொன்றுக்கும் மூன்று தினங்கள் விடுமுறையாக இருக்கும்.

இந்த உபகமிட்டியின் திட்டத்தின்படி சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் சாதாரண வேலை நாட்களாகவிருக்கும்.

---

## சைக்கிள் திருட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு

கட்டுவனைச் சேர்ந்த ராமன் நாகமுத்து என்பவர் அதே ஊரைச் சேர்ந்த எஸ். விஜயசுந்தரம் என்பவருக்கு சொந்தமான சைக்கிளைத் திருடியதாக காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி தீர்ப்பை இம் மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஆசிரியர்கள் கடமை

திருக்கோணமலை, வியாழன்

"ஆசிரியர்கள் தொடக்க வித்தியாதரிசிவரை கடமையாற்றுவதன் நோக்கம் நாட்டின் கல்வித்தரத்தை வளர்க்கவேயொழிய வெறும் வயிற்றை வளர்க்கவல்ல. இவ்வகையில் ஆசிரியர்கள் தான் வருங்கால சமுதாயத்தின் அறிவு விருத்திக்கும் ஒழுக்கத்திற்கும் மூலகாரணமாவார்கள்" என திருமலை மாவட்ட வித்தியாதரிசி திரு. சி. ஏ. ஞானசேகரம் திருமலைப்பகுதி அதிபர்கள், தலைமையாசிரியர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறினர்.

---

## தேசிய அபிவிருத்தி அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஞாயிறு

பாடசாலைகள் தேசிய அபிவிருத்தித் திட்டத்தை கல்வி மந்திரி திரு. பதியுதீன் மாமூத் இன்று தெஹிவளை மத்யமகா வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

---

## திருத்த மசோதா

புதுடில்லி, டிச. 2

ராஷ்டிரபதி, உப ராஷ்டிரபதி தெரிவு சம்பந்தமான திருத்த மசோதாவொன்று நேற்று லோகசபையில் தாக்கல் செய்யப்பட்டது.

---

## ஜப்பானிய ஒலிபரப்பு குழு

கொழும்பு, வெள்ளி

5 பேரடங்கிய ஜப்பானிய ஒலிபரப்பு கோஷ்டி ஒன்று டிசம்பர் 8-ம் திகதி இலங்கை வரும்.


# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனல் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரொஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரூ. 1-20 | ரூ. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

**அப்பியாச புத்தக ரகங்கள்:**

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான் சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரொஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சத வீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

**ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்**

போன்: 94040.

6, அல்பேர்ட்க்ரெசன்ட், கொழும்பு 7.

அரிய சந்தர்ப்பத்தை
தவறவிடாதீர்கள்!

உங்கள் திறமான பிடவை
வகைகளை உடனே தெரிந்து
எடுக்க விரைந்துவாருங்கள்.

கிறிஸ்மஸ்
மலிவு விற்பனை

இன்று ஆரம்பமாகிறதை
ஞாபகப்படுத்துகிறோம்!

டயரும்ஸ்

மெயின் வீதி, — யாழ்ப்பாணம்.



யாழ் குஞ்சு - உற்பவகம்

இல. 3, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்



ஜப்பானிலிருந்து நேரடியாக வரவழைக்கப்பட்ட அதிக முட்டை இடும் இனங்களாகிய வைற் லெக்கோர்ன்,பார்ட்-பிளிமத்றொக் உடன் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

JAFFNA HATCHERIES
No. 3, Stanley Road, Jaffna.


## சுழிபுரத்தில் நாவலர் தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆறுமுகநாவலர் இப்புவியில் அவதரிக்கா விட்டால் சைவமும் தமிழும் இப்போது அடைந்துள்ள வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது. உறங்கிக்கொண்டிருந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பிய பெருமை இப்பெருந்தகையாரையே சேருகிறது" இவ்வாறு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் ஆதரவில் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் நினைவுதின வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. அ. கந்தப்பு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

"யாழ்ப்பாணம் நல்லை நகரில் தோன்றிய செந்தமிழ்ச் செம்மல் நாவலர் பெருமானின் அரிய போதனைகளைப் பேணி நடப்பதன்மூலம் அவருக்கு சிறந்த முறையில் அஞ்சலி செய்வோம். சைவசித்தாந்தத்தின் கலங்கரை விளக்கமாக விளங்கிய நாவலர் தனது பிறப்பிடமாகிய யாழ்ப்பாணத்துக்கு மங்காப் புகழைத் தேடி வைத்தவர்.

திருவாளர்கள் சி. வரதராசா, நா. கிருஷ்ணசாமி, ச. வீரசிங்கம், ஆ. தில்லைநாதன், ந. தங்கவேலாயுதம், மு. வேதநாயகம் ஆகியோரும் பேசினர்.

## குளிக்கச் சென்றவர் மாண்டார்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த அத்துளுக்குளத்திற்குக் குளிப்பதற்காகச் சென்ற ஒருவர் இறந்து விட்டாரெனத் தெரிகிறது.

## உள்நாட்டு விமான சேவை விஸ்தரிப்பு

கொழும்பு, ஞாயிறு

ஏயர்சிலோன், இன்றுமுதல் திருக்கோணமலைக்கு தினசரி விமான சேவையை நடத்தும். வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்துக்கு திருக்கோணமலை வழியாக விமானசேவை நடைபெறும்.

கைப்பந்தாட்டம்

# கல்முனைக் கோஷ்டி 5போட்டிகளில் கலந்துகொள்ளும்

### யாழ்ப்பாணத்தில் 6-ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 5ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் கிழக்கு மாகாண கைப்பந்தாட்டச் சாம்பியனான கல்முனை யுனைடெட் விளையாட்டுக் கழகத்தினர் காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவின் கீழ் ஐந்து போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். வடமாகாணத்தில் இக்கோஷ்டி கலந்துகொள்ளும் போட்டிகள் யாவும் காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இம்மாதம் 6ந் திகதி போட்டிகள் ஆரம்பமாகின்றன. அன்று உடுவில் விளையாட்டுக் கழகத்துடனும், அடுத்த நாள் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்துடனும், 8ம் திகதி ரேயல் விளையாட்டுக் கழகத்துடனும், 9ந் திகதி சன்னாகம் ரெக்கட் விளையாட்டுக் கழகத்துடனும். 10ந் திகதி தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்துடனும் கல்முனைக் கோஷ்டி போட்டிகளில் கலந்து கொள்ளும்,

இப்போட்டிகளில் இலங்கையின் தலை சிறந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளுகின்றனர்.

## தேவிபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேவிபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டமொன்று இரண்டாம் வாடியில் திரு. ஏ. கனகராசா தலைமையில் நடைபெற்றது.

தேவிபுரத்திற்கு தபால் தந்தி வசதிகள் இல்லாமல் இருப்பதால் அரசாங்கம் அங்கு தபால்கந்தோர் நிறுவும்வரை புதுக்குடியிருப்புத் தபாற் கந்தோரிலிருந்து தபால் தந்தி பட்டுவாடாச் செய்ய குடியேற்றவாசியொருவரை நியமிப்பதெனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகத்தர் தேர்வில் திரு. ஏ. கனகராசா தலைவராகவும், திரு. இ. காசிநாதன் காரியதரிசியாகவும், திரு. எஸ். கனகரத்தினம் உபதலைவராகவும், மற்றும் 5 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள்: ம. இராசையா, எம். கணேசபிள்ளை ஆகியோரும் பேசினர்.

## டாக்டர்கள் பற்றுக்குறை

### இந்திய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை

புதுடில்லி, டிச. 2

இந்தியாவில் டாக்டர்கள் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு திட்டக்கமிஷனும் அரசாங்கமும் உரியமுயற்சிகளைச் செய்து வருவதாக இந்திய சுகாதார மந்திரி திரு. கார்மார்க்கர் நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

சென்ற ஏழாண்டுகாலத்தில் புதிய வைத்தியக் கல்லூரிகள் பல ஸ்தாபிக்கப்பட்டதாகவும் 1966-ம் வருடத்தில் 82,000 டாக்டர்களிருப்பார்களென்றும் மந்திரி கார்மார்க்கர் சொன்னார்.

## வேலையற்றோர் கொழும்பு விலாசம் கொடுக்கின்றனர்

கொழும்பு, ஞாயிறு

கொழும்புக்கு அப்பால் வேலையற்றிருப்போர் கொழும்பிலுள்ள சில விலாசங்களைக் கொடுத்து மத்திய தொழிற் பதிவுகந்தோரில் தம்மைப் பதிவு செய்துகொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் வெளியிடங்களில் பதிவு செய்வதால் அதிக வாய்ப்பு அங்கு இல்லையென்பதே.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

திங்கள் 4-12-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 ஆர். கிருஷ்ணமூர்த்தி—வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கனக. செந்திநாதன்—பேச்சு, 9-30 விஜயலட்சுமி இராஜேந்திரம்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-05 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மாயூரம் கே. ராமஸ்வாமி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கும்பகோணம் யு. ஆர். சந்திரா—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 நல்லுரை, 8-00 கும்பகோணம் யு. ஆர். சந்திரா—பாட்டு, 8-30 மாயூரம் எஸ். ரமஸ்வாமி—பாட்டு, 9-30 இளைஞர்குரல்—கதம்ப நிகழ்ச்சி.

## நாவலர் இல்லம் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய நாவலர் இல்லத்துக்கும் வள்ளுவர் இல்லத்துக்கும் இடையே நாவலர் குருபூசை தினத்தன்று தாச்சிவிளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

சுவாரஸ்யமான இப்போட்டியில்நராவலர் இல்லம் 8—4 புள்ளிகளால் வள்ளுவர் இல்லத்தை தோற்கடித்தது.

திரு. சி. வரதராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## பட்நாயக் தேர்தல் செல்லுபடியாகும்

புதுடில்லி, டிச. 2

ஒரிஸ்ஸா ராஜ்ய முதன் மந்திரி திரு. விஜயானந்த பட்நாயக்கின் தேர்தல் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி அவருடன் போட்டியிட்ட அபேட்சகர் செய்திருந்த மனுவை தேர்தல் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.


மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM — REG. TRADE MARK 18561

மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No 18255 — A.M. BUHARI. 255 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

ஏ. எம். புகாரி அன் கோ.

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# சிங்களத்தில் சிறிது நேரம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊரெழு கொலைவழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் சனிக்கிழமை நடைபெற்றதல்லவா? அன்று அவ்வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் வசதிக்காக சிறிது நேரம் சிங்களத்தில் நடைபெற்றது.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஹென்றி ராஜபக்ஜா தமக்குத் தெரிந்த மொழியான சிங்களத்தில் வாக்குமூலமளித்தார். முடிக்குரிய தரப்பில் அவர் ஆங்கில மொழிமூலம் விசாரணை செய்யப்பட்டார். இத்தருணத்தில் மாஜிஸரேட் கோர்ட்டு முதலியார் திரு. ஏ. சின்னத்துரை ஆங்கிலத்தை சிங்களத்திலும் சிங்களத்தை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்ததோடு மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் இக்குறிப்பிட்ட சாட்சியைச் சிங்களத்திலேயே விசாரணை செய்தார். ஆனல் வழக்கம்போல விசாரணை ஆங்கிலத்திலேயே பதிவாயின.

# உலகவலம்

## இந்திய தேயிலை உற்பத்தி

இந்தியா இவ்வாண்டு செப்டம்பர் மாதம் வரை 55 கோடி ராத்தல் தேயிலையை உற்பத்தி செய்திருப்பதாய் லோகசபையில் அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டுக் கடைசிவரை மொத்தம் 76 கோடி ராத்தல் தேயிலை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

∴

## மேஜர் ஆஜித் சிங்

கடாங்காவில் காணமற்போனதாகக் கூறப்படும் இந்திய மேஜர் அஜித்சிங், எலிஸபெத்வில்லிக்கு வெளியே எங்கோ ஓரிடத்தில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது என அங்குள்ள ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறினர்.

∴

## அணுசோதனை நடத்தும்

பிரான்ஸ் தொடர்ந்து அணுசோதனையை நடத்தும் என அமெரிக்கா வந்துள்ள பிரெஞ்சு பாதுகாப்பு மந்திரி கூறினர்.

∴

## எரிமலை தீ கக்கியது

இந்தோனேஷியாவில் எரிமலை ஒன்று நெருப்பைக் கக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து 11000 மக்கள் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.

∴

## யு. எஸ். சோதனை

புதிய மெக்ஸிகோவின் உட்புறத்தில் அமெரிக்க அணுசோதனை நடத்தவிருப்பதாய்த் தெரிகிறது.

# 50,000 புது கண்டு பிடிப்புகள்

## யு. எஸ். ஸின் சாதனை

வாஷிங்டன், டிச. 2

1961-ம் ஆண்டில் அமெரிக்காவில் ஏராளமான பொதுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன. புதுப்புது முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. 50,000 புதுக் கண்டுபிடிப்புக்களுக்கு உரிமைப்பதிவுகள் வழங்கப்பட்டன. இவை அனைத்தும் அமெரிக்காவில் தொழிலையும் வாழ்க்கை முறையையும் மாற்றி வருகின்றன.

பொருள்களை மிக விரைவாகவும், இன்னும் சிறப்பாகவும் செய்வதற்கு புது முறைகளைக் காண, கண்டுபிடிப்பாளர்கள் எந்தத் துறையையும் விட்டுவிடவில்லை. கண்டுபிடிப்பாளர்களுக்கு ஊக்கமூட்டுவதாக அமைகிறது. தொழில்துறை ஆராய்ச்சி சாதனங்களுக்குச் செலவிடும் பெரும் தொகை. 1961-ம் ஆண்டில் தொழில்துறை குறைந்த பட்சம் சொந்தமாக 500 கோடி டாலர், வர்த்தகப் பொருள்கள் முறைகள் பற்றிய ஆராய்ச்சி, வளர்ச்சிகளுக்கு செலவிட்டிருக்கிறது.

## அல்ஜீரியா

அல்ஜீரியாவில் நடைபெற்ற கலகத்தில் 8 முஸ்லிம்களும், 6 ஐரோப்பியர்களும் காயமடைந்ததாயும், 15 பிளாஸ்டிக் குண்டுகள் அங்கு வெடித்ததாயும் அறிவிக்கப்பட்டது.

∴

## ஐ. நா. விமானம் காணவில்லை

காங்கோவில் ஐ. நா. விமானம் ஒன்றைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டது.

# தொழில் கோஷ்டிகள் சச்சரவினுல் ஒருவர் கொலை?

## டிமீறியா தோட்டத்தைச் சேர்ந்த ஐவர் கைது

பதுளை, ஞாயிறு

ஆறு குழந்தைகளின் தந்தையும் டிமீறியா தோட்டத்தைச் சேர்ந்தவருமான 45 வயதுள்ள திரு. ஆர். ஜி, பிள்ளை என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-15 க்கு பாரதூரமான முறையில் கத்தியால் குத்தப்பட்டார். காயமடைந்த திரு. பிள்ளையை அவரது மனைவி பதுளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் மரணமானர் எனத் தெரியவந்தது.

பதுளை மாஜிஸ்டிரேட், பதுளை ஆஸ்பத்திரிக்குவிஜயம் செய்து பிரேதபரிசோதனையை நடாத்தும்படி மாவட்ட சுகாதார அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இறந்தவரின் உடலில் சுமார் 15 காயங்களுக்கு மேல் இருந்தன. அவரின் ஒரு கை துண்டிக்கப்பட்டு இருந்தது. இச்சம்பவத்தின் காரணமாக மாரிமுத்து, பரமசிவம் ஆகிய இருவரும் காயங்களுடன் பசறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருதொழிலாளர் கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற ஒரு சச்சரவைத் தொடர்ந்துதான் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக நம்பப்படுகிறது. டிமீறியா தோட்டத்தைச் சேர்ந்த சண்முகம், கந்தசாமி, மாணிக்கம், சிதம்பரம், வடிவேல் ஆகியோர் பசறை பொலிஸாரினல் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

# படகு கவிழ்ந்ததனுல் சகோதரிகள் பலி

தங்காலை, ஞாயிறு

சகோதரிகளிருவர் மாவல ஆற்றில் படகொன்றில் செல்லும்போது படகு கவிழ்ந்ததனுல் தண்ணீருள் மூழ்கி இறந்தனர்.

கே சோமாவதி (14) கே. எச். பியசீலி (8) ஆகிய இருவரும் டி. எச். பிரேமாவதி, பி. பராணமான ஆகியோருடன் படகில் செல்லும்போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்தது. பிரேமாவதி, பராணமான ஆகியோர் காப்பாற்றப்பட்டனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. எப். திரு. திஸநாயக்கா விசாரணை நடத்தியபோது இறந்தவர்களின் தாயாராகிய பி. எம். பேபிநோன தெரிவித்ததாவது:-

நான் எனது புதல்விகளைப் படகில் செல்ல வேண்டாமென தடுத்தேன். அவர்கள் அதைப் பொருட்படுத்தாது சென்ருர்கள். பின்னர் படகு கவிழ்ந்ததைப் பார்த்தேன்.

பட்டிசிங்கோ எனும் மீன்பிடிகாரர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

அவலக் குரல் கேட்டு நான் படகில் குரல் கேட்ட இடத்துக்கு விரைந்துசென்றபோது மூன்று பெண் பிள்ளைகள் அவல நிலையிலிருப்பதைப் பார்த்தேன். அவர்களை நான் காப்பாற்றினேன்.

விபத்தினல் ஏற்பட்ட மரணமென திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். —

# 50,000 ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. பி. பி. தம்பு, அரசாங்க சேவை குமாஸ்தாக்கள் சங்கத் தலைவர் திரு. டி. பி. திஸ்ஸநாயக்கா, இ. தொ. கா. பிரமுகர் ஜனுப் ஏ. அஸீஸ் ஆகியோர் பேசினர்.

**டாக்டர் பெரேரா பேச்சு**

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் பின்வருமாறுகூறினர்:-

விதிக்கப்பட்டுள்ள வரிகளிலிருந்து யு. என். பி.க்கும் இன்றைய அரசாங்கத்துக்கும் வித்தியாசமில்லையென்பது தெளிவு. 1953-ம் வருடத்தில் அரிசியின் விலையை யு. என். பி. அரசாங்கத்தின் மந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தன அதிகரித்தார். இப்பொழுது பீலிக்ஸ டயஸ பண்டாரநாயக்கா நடுத்தர, கீழ்த்தர மக்கள் மீது அதிக பளுவைச் சுமத்தியுள்ளார். ஜே. ஆர். ஜயவர்த்தனவின் கொள்கைகளை பீலிக்ஸ பண்டாரநாயக்கா பின்பற்றுகிருரென்பது தெளிவாகிவிட்டது.

இ. தொ. கா. பிரமுகர் ஜனுப் ஏ. அஸீஸ பேசுகையில் தேசிய அபிவிருத்தி தங்களின் எதிர்காலத்தையும் தங்கள் பிள்ளைகளையும் சம்பந்தப்பட்டதால் அரசாங்கத்தைப்போலல்லாது தொழிலாளர்களுக்கு அதில் அதிக அக்கறை இருக்கிறது.

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் தொழிலாள வகுப்பு மக்களின் கட்டுப்பாடான இயக்கம் அரசாங்கத்தின் அநியாய அடக்குமுறை வரிகளுக்கு தெளிவாக எதிர்ப்புக் காட்டியுள்ளதென்ருர்.

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. பி. பாலா தம்பு பேசுகையில் அடுத்த நடவடிக்கை இக்கோரிக்கைகள் சம்பந்தமாக பிரதமருடன் தொடர்பு கொள்வதுதானென்ருர்.

# 'வேலைநிறுத்தம் நியாயமானது'

## தொழில்கோர்ட்தீர்ப்பு

கொழும்பு, சனி

இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம், அகில இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுக்கும் 'வீரகேசரி நிர்வாகத்துக்குமிடையேஉள்ள தொழிற் தகராறு சம்பந்தமாய் விசாரணை நடத்திய திரு. ஏ. பெர்னுண்டோ, ஸ்தாபன ஊழியர்களான திரு. பயஸ் பெர்னுண்டோ, திரு. இஸட். ஏ. எம். ஹுஸைன் ஆகிய இருவருக்கும் 6 மாத மொத்த சம்பளம் வழங்க வேண்டுமெனவும் அவர்களை நிர்வாகம் திரும்பவும் வேலைக்கு ஏடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் தீர்ப்பளித்தார்.

தங்கள் இலாகாத் தலைவர்களைப் பயமுறுத்தியதாகவும் கீழ்ப்படியாமலிருந்ததாயும் வீரகேசரி நிர்வாகம் இவர்கள் மீது குற்றம் சாட்டியதுடன் பின்பு அவர்களை வேலைநீக்கம் செய்தது.

திரு. பெர்னுண்டோ தமது தீர்ப்பில் கூறியாதாவது:

"இந்த ஊழியர்களை வேலை நீக்கம் செய்த நிர்வாகத்தின் நடவடிக்கை நியாயமற்ற தொழில்முறை என்று நான் கருதுகிறேன். எனவே இவர்களின் வேலைநீக்கத்தை ஆட்சேபித்து வீரகேசரி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தது நியாயமானதே.

ஒரு கம்பெனியின் நிதி நிலைமை திருப்திகரமாய் இல்லாத நிலையில் வருடாந்த சம்பள உயர்வு கொடுக்குமாறு உத்தரவிடுவது நியாயமற்றது. எனவே 1958 ஏப்ரல் 1-ந் திகதி முதல் சம்பள உயர்வு கொடுபடாதது நியாயமானது.

இத்தீர்ப்பின் பிரகாரம்ஊழியர்களுக்குச் செலுத்தப்படக்கூடிய சகல தொகையும் ஒரு மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்."

# கடாங்கா துருப்புக்கள் வெறியாட்டம்

நியுயோர்க், டிச. 3

கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லியில் கடாங்கா துருப்புக்கள் சிலர் வெறிகொண்டு ஆடியதாகவும் ஐ. நா. துருப்புக்களை நோக்கிச் சுட்டதாகவும் பின்னர் அவர்கள் ஐ. நா. படையிடம் சரணடைந்ததாகவும் கூறப்படுகிறது.

நடுநிலைமைப் பகுதியொன்றில் காங்கோ பிரதமர் திரு. அடௌலாவைச் சந்திக்க ஷோம்பே விரும்புவதாகவும் ஆனல் ஷோம்பே லியப்போல்ட் வில்லிக்கே வர வேண்டுமென்று அடௌலா மீண்டும் கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

# கிரிக்கெட்

கான்பூர், டிச. 3

இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்று வரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இந்தியா இன்றைய ஆட்ட முடிவில் தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கட் நஷ்டத்துக்கு 467 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது. இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கட் நஷ்டத்துக்கு 165 ரன்கள் எடுத்தது.

# தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த **எங்கள் செல்வி**

●

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன் நடித்த **மிஸ்ஸியம்மா**

●

சாவகச்சேரி தேவேந்திரா ஜெமினி கணேசன் நடித்த **களத்தூர் கண்ணம்மா**


இப்பொழுது திரையிடப்படுகிறது!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா

நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

மிஸ்ஸியம்மா


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.